உ

சிவமயம்

கணபதிதுணை

# திருவாப்பனூர்ப்புராணம்.

திருப்பூவணம்

## கந்தசாமிப்புலவர்

இயற்றியது.

இஃது

மதுரைச்சில்லா காரைக்குடி

மெ-பெரி-ராம. மெய்யப்பச்செட்டியார்

வேண்டுகோளின்படி

ஷை சில்லா தேவகோட்டை

மு-ராம. திருப்பெருந்துறை

அண்ணாமலைச்செட்டியார்

குமாரர்

**வன்றொண்டச்செட்டியாரால்**

பலபிரதிரூபங்களைக்கொண்டு

பரிசோதித்து

சென்னபட்டணம்

வித்தியாநுபாலனயந்திரசாலையில்

அச்சிற்பதிப்பிக்கப்பட்டது.

தாதுஸு மாசிமீ 1887

சிவமயம்.

# சிறப்புப்பாயிரம்.

———.o:———

தேவகோட்டை

ம௱௱ஸ்ரீ

வீர-லெ

சின்னையசெட்டியாரவர்கள்

இயற்றிய

நேரிசையாசிரியப்பா

சீரவளர்புயறவழ் சென்னியம்பொருப்பிற
கூர்வளர்கணைவிழிக் கொடிசசியரிணைததோட்
குடைதலின்வணங்குவ வொப்பனீளவேயக
னடைபயின்முசுககலை நலவினையாட்டின்
வளைதநதிலங்கு மாமைசாலகுறிஞ்சியுங
கிளைமென்குதலைக கிளவியிற்றெருறுவிய
ரெமமுறகுறுகின ரிதயமுமிவ்வணம்
பொம்மெனக்கலங்கிய புரிதுமென்றுணர்த்தியாங்
கொணடயிாமதிக்கு மொலிகெழுபுறவமுங
தணடருகழனியிற் றமாதுவாணமுக
நிழலைக்கடிநரு நினறிழிநதொழுக
மழலைசசுரும்புலாஅ மரைமலர்க்களையென
வடைவினிற்களையா வஙகையயருங
கடைசியர்மடநடை கற்பவிழைந்தபோ
லனணப்புட்க ளங்கலார்பின்னர்த்
துன்னிததிரியுந் துறுகவின்மருதமு
பொன்றுணைநுளைச்சியர் பொருதடங்க...
வென்றிடப்படுகடல வெளிற்றலைப்பாணியிற்
றிறையிடும்பரிசிற் செந்துவர்பணில
மறுவினித்திலமிவை வாரிக்குவிககும
பெருங்கழிவயங்கு பீடுசேர்நெய்தலு
நெருங்கியெவ்வளனு நிரம்பநிறைந்து

கொடியவெம்பாலையில் குறையுங்கெழுமிப்
படியிகந்தோங்கு பாண்டிநாட்டிற்
பதினான்கெனுமுயா பதியினுளொன்றாயச
சதிசோந்திடுபர சமையத்தொழுகுநா
நாத்திகர்கோளரி ஞானசம்பந்த
மூர்த்திவாய்மலர்ந்த முதிர்சுவைப்பதிகம்
பெறறுளமேன்மையிற் பெரிதுவிளங்கி
முற்றியதவகுறு முனிமுதற்பகையினுனா
சாரினெளியேந் தகையுந்திறனிலேம
யாருயிருங்கவ ரெறுழ்வலிககூறறி
னாவியைவெள்ளி யடைந்தவறபுரந்த
கோவகமகிழவிற் குலாயவிததலத்தி
லடைககலம்புகினமக் கச்சமின்றென்னாத
தொடைதிரைநரலை சூழ்கிடந்தனைய
பாம்புரியுடுத்துப் பல்வகைக்கடவுளா
மேம்புரியிதுதலை மீப்பரித்திலதே
லந்தரத்தெவ்வா றமருமென்னங்
வந்தொளிரகப்பா மரீஇமணிமாடம்
விண்ணினுமோங்கிமேல வெணகொடிபொலிய
நண்ணியதோற்றமிந் நகரியொப்பும்ப
ரெங்கணுமிலையா லீதுமெய்யெனத்
தங்கரனெடுத்துறுந் தன்மையுறழ
வணிதிகழுந்திரு வாப்பனூரின்
கணிதமின்மான்மியங் கழறியவடநூல்
பலருமறியப் படாமைக்கிரங்கிப்
புலவர்நிதியிற் பூவணத்துதித்த
கநதசாமிக் கவிதாசரபனா
செநதமிழமிழ்தினிற் செய்தபுராணந
திரோபவங்கலவாத் தீதின்மூதறிஞரு
மொரோவழிமயங்கவேட் டுற்றதுகுறித்ததைத
தேவைமாநகர்வயிற் செல்வஞ்சிறந்து
மேவியவணிகர் விழுத்தகுகுலத்தி
லணணாமலைப்பெய ரவன்முனைப்பவந்தொறு
மெணணாவிழைத்த விரும்புணணியத்தாற
றோன்றியதோன்ற றுகடீர்தூககுணத
தான்றவருள்ளத் தகலாதுறைபவன்

சிவபரங்கழற்கே சிந்தனையுய்த்துளான்
பலவினைதணந்தோன் பகரொணாழுடத்த
திவற்குணாவுறுத்தன்மிக் கிசையெனவென்னை
யவகொடுநெறிப்புகா தருளியகுரவன்
பொருவருவியாழன் புந்திபிறபட
மருவிரிசுருள்குழல் வாணியலருறப
போதவுறுணணிய புலமையாள
ஞேதுமுயிர்கட் குறுதிபயககுஞ
சைவந்தன்னைத் தரணியினிறீஇயவன
கைவந்தனவாக் கலைமுழுதோர்ந்தோ
னெழுததுசசொற்பொருள யாப்பலஙகாரம்
வழுததபததேர்நத மாசறுகாட்சியன
றுவளிடைப்பொறிமக டோய்மணிமாாபன
புவனமூனறும் போர்த்தசீரதநியன
றெழுதகைககுரிசிலவன றெணட
னெழுதலாவெழுத்தி னிசைததளிததனனே
சிறபபுப்பாயிர முறறிறறு

---

௨

# சாத்துகவிகள்.

புரசை

ம ள. ள. ஸ்ரீ

அஷ்டாவதானம் சபாபதிமுதலியாரவர்கள்

இயற்றிய

நேரிசையாசிரியப்பா

வளம்பொதிமுததமிழ் வரையாப்பைஙகூழ
விளஙகியநிலநதெழு விளைநிலமனையது
கழகவாணா கெழுமவைக்களத்துப்
புலமையளந்தறி நிலைதவழகடவுட்
பலகையிற்சிறப்பமை யுலகமுவப்ப
தெப்புலத்தியாணடு மெவ்வகையுயிர்தொறு
மொபபுறவிரவி யுடன்றொழிற்படுததும
பெரும்பெயரிறைவன் பிராட்டியுண்மகிழ்வான்

விரும்பினன்வதுவை வேட்டாசியற்றியு
மெண்ணெண்டிருவிளை யாடல்பணிததுந்
தண்ணெனறலையளி தகவரவிறைகொளுஉம்
பாண்டிநன்னாட்டிற் பதிகத்திருத்தல
மீரேழவற்றுளும பேர்வலனுடைமையி
னப்பெயாபுனைந்தன ராங்கொலென்றேவருஞ
செப்பினரகங்களி திளைததிடுநெடும்பதி
மான்மியமேதகு வானவாதமகரு
மென்முறையிப்பெயா விளம்பினராகலின்
வரன்மாணபுடையே மெனமகிழசிறப்ப
வுரன்மாணபுலவரு ளுயாபுகழசான்ற
காமர்சொற்கந்த சாமிபபுலவன்
வடமொழிதவாமுறை நடைபெறநவின்றுள
வாப்பனூர்பபுராண மெனுநீடாழிய
கோபபுடைப்பொருளணி குலாவுபேரிரத
மசிலாதிருததலி னுஙகாஙகொரோவழி
விசசையாபாஙகலான் மேவுறுதயலுழி
யென்பராலினியம்ஃ தச்சினிலியையின்
முனபினிலயாணடு மொயமபினினியஙகுமென
றுமறைப்பாதுகை யடிததுணைதோயவுறப
புரிதிருததவததினுற் பொற்புரியினுமுய
ராரூர்நால்வர்க கன்றுகல்லாலின்
சீரூர்நிழறபுடைச சென்றமாந்தருளிய
குரவனையொருவர் பொருட்டுக்குறிகொள
வரவருடிருப்பெருந் துறைமுதலியதலத
தறுபான்மூன்றுநா யன்மாரரன்பதம்
பெறுகுருபூசனை பெட்பினிடாதது
மன்பருணமுன்னிற பவன்காரைக்குடி
யின்புறவுறைதரு மிராமசாமிசெய்
தவப்பயனென்ன நிவப்புறுகான்முளை
மருவுறுதனுது மாணவர்தம்மு
ளொருவன்மெய்யப்ப னுரைத்தனனாக
வன்னதைசசொன்னயம் பொருணயமனைத்தநு
துன்னியயாவருந் துகளறவுணர்ந்தனா
நாநலநதழுவுபு நல்விருந்தமுதென
மாநலஙகூட்டு னா மதித்துளம்வியப்ப

வருமபதஙகட்கெலா முறும்பொருள்விளக்கியு
மளவினனனிநெடி தமைவினாராய்ந்தும
பளகறவசிற் பதித்துநலகினான்
மூவுலகததுளு முளிவறுமேன்மைகூர்
தேவியறபாணடித திருவநீடேததுக்
குயிலுமயிலுங கோதையரிசையு
மியலுமாடலு மெழிலுறக்கறபான்
பொருககணைத்தேமாந தருதொறுங்குழைததாங்
கருமபியதியிடை விரும்புமந்நலார்
வாள்விழிகுவமை வகிர்படாதாம்படி
நீளவடுதிரடவ நெடிதுநாளுனாறறுவர்
னானாதுகுழுமிய தேனார்துதைமலர்ப்
பொழிறசினைத்தேக்கிருல வழித்திடமோடடிள
வாளைமேறபாய்தலி னீளிடையுகுவன
தேத்திரடெங்கிள நீர்த்திரளொடும்புகுந
தகன்பணைசெநநெலைச் சுகம்பெறவளாககு
நனிபெருஞசெலவங கனிவுகூாவாழகைகக
கறபினாரீஙகாப பொறபுணைமாடந
திகழதரபபொதுளிய தேவிகோட்டையா
னுகலருமபரசிவ னுடைமைததொணட
ராமெனவாதலு ரடிகள்பொன்னடியிணை
பணியுமாவிரதனப் பரிணிதர்குருமொழிக
கணியராககணட வருட்பெருந்துறைககண
வந்துளோரெவர்க்கு மருதுவேட்டனவெலாந
தந்துநீடுறுபுகழ தககதோர்மடமும்
பெருந்துறைச்சினகரத் தொருங்குசில்பணிகளும
வயங்குறநிரைத்த வியன்செறிசீர்த்தி
யணணாமலைத னரும்பெறனோன்பெனுந
தணணாரமிர்தத தடங்கடலுதித்த
விளவலளப்பரு மிலக்கியவிலக்கணங
கிளர்பலகாவியங கெழீஇயசெம்பொருளெலா
மையமாதிமூன் றரிறபவாய்ந்துளோன்
வையநிலைபிறழினுஞ் சுடர்திசைமாறினு
நிறைதிருநெறித்தமிழ் முறைபாராயணம்
புரிதலகையொழியா விரதமும்பத்தியும்
வாயமையுஞ்சீலமுந் தூய்மையுந்தனவே

யாகவெஞ்ஞான்றும வாகுநீடியோன்
றெணடத்தொகைவிரி சொற்றசேவையர்பிரான
றணடருஞசிஙகரந தன்னூர்நிறுவினோன்
கற்றுணர்வுமீககொளுங கலைஞர்கவிவலோர்
முற்றியகுழாததுண முனிவறப்பயிறலுந
தன்மாணவரொடும் பன்னூற்கேள்வியின்
விழைநலம்வினாதலும விடுத்தலுமென்றிவை
தழைவுறுங்கைகோள தவாஅநிலைமையோன
றத்தம்வழித்துணை தாமெனப்பலர்நுவ
லெத்தகையறனுநம மீசநகேயெனா
மொழுக்கமெவவாற்றினு மிழுககாநோன்மையி
னிகமாகமத்துறை யிகவாமரபுளி
யென்றுநதற்பாறகினிய
வன்றெணடப்பெயா துன்றுசீரியனே

---

யாழப்பாணம

ம. ா ா. ஸ்ரீ

## சி - வை. தாமோதரம்பிள்ளையவர்கள

இயறறிய

அறுசீரக்கழிநெடிலஆசிரியவிருத்தம

எழுத்தினொடு சொற்பொருள்யாப் பலங்கார மிலக்கியஙக
ளவையு மாய்ந்தோர்
வழுததுமண்ணு மலைவணிகன் மகன்றேவி கோட்டையினன்
வன்றெண் டன்சீர்
பழுததகந்த சாமிபுக லாப்பனூர்ப் புராணமச்சிற
பழுது பாற்றி
விழுததகநன் களித்தனனிம் மேதினியின் மீதினிது
விளங்க மாதோ.

தஞ்சாவூர் - தே.

ம. ா. ா. ஸ்ரீ

# சதாவதானம் சுப்பிரமணிய ஐயரவர்கள்

இயற்றிய

நேரிசையாசிரியப்பா.

மணிவளர் தரங்கத் தணிகிளர் கார்க்கோட்
டுகிலுடை மருங்குன் மகியெனு மகட்கா
ருயிர்நிலை யுறுப்பெனச் செயிரற நிலவுந்
தென்னாட் டினிதுயர் பன்னாட் டலமிடர்க
கதிநான் ககற்றுமப் பதினன் கவற்று
ளொன்றாய்ப் பலவா யொன்றாய் வயங்குரு
செம்மான் கரத்துப் பெம்மான் விழைஇய
வுறையுளாய் வையயந் துறையுளார்ந் தொளிதிரு
வாப்பனூ ரமரர்கை கூப்புமான் மியமெனு
மரதன மதனை யாரியக் கடலு
ளெடுத்துமண் ணுறுத்திட் டெடுத்துவின் ணகர்க்கோர்
காவணத் தடர்ந்த கமுகினம் புடைசூழ்
பூவணத் துதித்த புனிதநற்சாதகன்
றந்தையா யிலரத் தாணுமெய்ப் பத்திமைக்
கந்தசா மிப்பெயர்க் கவிநா வலவோன்
றென்மொழி யென்னுந் திகழலங் காரப்
பொன்முடி யணியிற் பொறபுறப் பதித்தன
னம்முடி தொன்மைய தாதலி னாய்வுறீஇச
செம்மையிற் புதிதாத் திருத்தியச சியற்றிப்
புவிரா சரினும் புகழ்நல மிகருள
கவிரா சரெனுங் கவினபி தானக
கின்றி யமையா வியல்பின திஃதெனச்
செந்தமிழ்ப் புலவோர் சென்னியிற கவித்தன
னுனடி யுதவிய நன்றி நினைந்தாங்
கெணடிசை மதிகரு மிருமைகொள பொருநையோ
டிகலுறீஇச் செருக்கிய விதையடர்க் குதுமெனு
மிகவிரைந் தோங்கி மீமிசை யிவரா
வானதி திடர்பட மலர்த்தா துருக்கு
மானல வுததி யான மருவுற்
றாழியு முலவாப் பூழிய னாட்டி

னுதீசி யாசைக் குரியவ னுக்கமுந்
தநீசி யீகைத தரமுஞ் சிறிதெனப்
புகறர மல்கிப் பொலிமாட் சிமையொடு
நிகரற வாழ்பல நிதியவர்த் தாங்கிய
தூவிகோட் டடவுஞ் சுடர்பொன் மாடத்
தேவிகோட் டையெனுஞ் செழும்பதி வாண
ணணிகெழு தனகுல வணிகர் சிகாமணி
யில்லார்க் குதவும் பல்லோ ரறத்தினுந்
தன்றரு மம்பெரி தென்றுணர் தற்கொரு
சான்றே யென்னத் தானமெ வற்றினு
மான்றோர் பெரிதென் றறைந்திடு மன்ன
தான மடமொன்று சார்ந்துண் பவர்கரு
மீன மடமொன் றியவரு நால்வகைக்
கருப்பெருந் துயர்தீர் திருப்பெருந் துறையிற
றாபனஞ் செய்துறு தாபதர் முதலா
மெவ்வெவர் தமக்கு மென்றுநெய் பாறயிர்
துவ்வுமின் போநகஞ் சொரிந்துண் பிப்பவ
னண்ணிய சீர்த்திய னண்ணு மலையெனும்
புண்ணிய வான்முன் புரிதவத் துதித்தோன்
றிருமக ணிலைஇய செல்வனென் றற்குப்
பெருமைகொ ளாகு பெயரோன் றுடையோ
னழுக்கா றகற்றிய வகத்திய னைப்பினு
மிழுக்கா துறக்கலை யாவு முணர்ந்தோ
னிருவே றுலகத் தியற்கை யாமென்
றொருநூ லுரைத்த வுரையினை மறுத்தோன்
வருபவர் பசிப்பிணி மடப்பிணி யொழிக்கு
மிருவகைக் கொடையுநேர்ந் திம்பரார் கற்பக
முரணில் லாமுக் கரணங் களையு
மெய்ம்மை சிவமே வேறுள வனைத்தும்
பொய்ம்மை யெனவே புகன்றதெய் வீகத்
தமிழ்மறை யென்னு மமிழ்தை மன்பதைக்
குய்வு வழிதெரித் தூட்டிய நால்வராஞ்
சைவ சமையா சாரியர் தாண்மல
ரின்றொண் டிற்கே யீந்து
வன்றொண் டப்பேர் வாய்ந்தது யோனே.

சாத்துகவிகள் முற்றிற்று.

உ

சிவமயம்.

# தேவாரப்பதிகம்.

———:o:———

## திரு ஆப்பனூர் - பண் - குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

முற்றுஞ்சடைமுடிமேன்முதிராவிளம்பிறைய
னொற்றைப்படவரவமதுகொண்டரைக்கணிந்தான்
செற்றமில்சீரானைத்திருவாப்பனூரானைப்
பற்றுமனமுடையார்வினைபற்றறுப்பாரே. (௧)

குரவங்கமழ்குழலாள்குடிகொண்டுநின்றுவிண்ணோ
விரவுந்திருமேனிவிளங்கும்வளையெயிற்றி
னரவமணிந்தானையணியாப்பனூரானைப்
பரவுமனமுடையார்வினைபற்றறுப்பாரே. (௨)

முருகுவிரிகுழலார்மனங்கொளனங்கனைமுன்
பெரிதுமுனிந்துகந்தான்பெருமான்பெருங்காட்டி
னரவமணிந்தானையணியாப்பனூரானைப்
பரவுமனமுடையாாவினைபற்றறுப்பாரே (௩)

பிணியும்பிறப்பறுப்பான்பெருமான்பெருங்காட்டிற
றுணியினுடைதாழச்சுடரேந்தியாடுவா
னணியும்புனலானையணியாப்பனூரானைப்
பணியுமனமுடையார்வினைபற்றறுப்பாரே (௪)

தகரமணியருவித்தட்மாலவ்ரைசிலையா
நகரமொருமூன்றுநல்ங்குன்றவென்றுகந்தான்
அகரமுதலானையணியாப்பனூரானைப்
பகருமனமுடையார்வினைபற்றறுப்பாரே (௫)

ஓடுந்திரிபுரங்களுடனேயுலந்தவியக
காடதிடமாகக்கனல்கொணடுநின்றிரவி
லாடுந்தொழிலானையணியாப்பனூாானைப
பாடுமனமுடையார்வின்பற்றறுப்பாரே (௬)

இயலும்விடையேறியெரிகொண்மழுவீசிக்
கயலிணைக்கண்ணுளொருபால்கலந்தாட
வியலுமிசையானையெழிலாப்பனூரானைப்
பயிலுமனமுடையார்வினைபற்றறுப்பாரே. (எ)

கருக்குமணிமிடறன்கதநாகக்கச்சையினு
னுருகுமடியவரையொளிவெண்பிறைசூடி
யரக்கன்றிறலழித்தானணியாப்பனூரானைப்
பருக்குமனமுடையார்வினைபற்றறுப்பாரே (அ)

கண்ணன்கடிக்கமலமலர்மேலினிதுறையு
மண்ணற்களப்பரிதாய்நின்றங்கடியார்மே
லெண்ணில்வினைகளைவானெழிலாப்பனூரானைப
பண்ணின்னிசைபகர்வார்வினைபற்றறுப்பாரே (கூ)

செயயகலிங்கத்தார்சிறுதட்டுடையார்கள்
பொய்யர்புறங்கூறப்புரிந்தவடியாரை
யையமகற்றுவானணியாப்பனூரானைப்
பையநினைந்தெழுவார்வினைபற்றறுப்பாரே (க0)

அந்தண்புனல்வைகையணியாப்பனூர்மேய
சந்தமலர்க்கொன்றைசடைமேலுடையானை
நந்தியடிபரவுநலஞானசம்பந்தன்
சந்தமிவைவல்லாரதுமொறறறுப்பாரே (கக)

திருசசிறறமபலம்

பாண்டிநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - ஆப்பனூரீசுரர். தேவியார் - அம்பிகையமமை

சிவமயம்.

கணபதிதுணை.

# திருவாப்பனூர்ப்புராணம்.

## விநாயகக்கடவுள்.

காப்பு.

திருத்தன்மாக்கடன் மேனியஞ்செம்மலா
ருத்தன்மாக்கம லந்திகழாப்பனூர்
நிருத்தன்மாக்கதை நூனிரம்பும்பொருட்
டொருத்தன்மாக்கழ லுன்னுமென்னுளமே. (க)

நூற்பயன்

ஒருமையினோர்ந்துபகிடத முணர்த்துபரம்பரனுப்ப னூர்ப்புராண, மருமையினோதினர்கேட்போ ரன்னுதிசயனுந்த மாமெணபோகம், பருகுவர்வாணுளவுங் குறைதவிர்ந்துபிணியொழிநது பகைவென்றோங்கித், தருமலர்மானத்திவர்ந்து வானுலகமுழுவதுஞ்சஞ்சரிப்பர்மாதோ. (உ)

திருவாப்புடையார.

நீர்பூத்தகடற்கணலை திவலைநுரைபுற்புதத்தி னெறிபோலெண்ணில், பாராபூத்தவகிலாணட முதித்தொடுங்குநகருப்பொருளைப் பரந்தாமப்போக், கார்பூத்ததிருவுருவத் தரிபிரமாகியர்கருத்துங் கடந்துநின்ற,' சீர்பூத்ததிருவாப்ப னூருடையதனிமுதலைச் சிந்தைசெயவாம் (௩)

இதுவுமது

காப்புடையாரமரர்மணி மகுடகோடிகளுரிஞ்சிக் கழற்காலிசேதுகுஞ், சேப்புடையார்கனகவரைச சிலையுடையாரணிசருமஙு் திருததார்மூன்றும், பாப்புடையாரெனத்தரிக்கும் பண்புடையார்வையைவடபான்மிக்கோங்கு, மாப்புடையார்திருவடித்தா மரையையருட்டேன்றதும்ப வகத்துள்வைப்பாம். (௪)

குரவங்கமழ்குழலமமை.

கானேறுதருநிழல்வின் மகளிர்குழற்காரிருட்குங் கணவர்குமெம், வானேறுமிளிர்தருவெண் மதியினுக்குங்குவியாது மலர்ந்துஞானக்,

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY
MADRAS-600 090

தானேறுமன்பருளத நடந்தோன்றித்தணணளிசூழ் தருசீள்வாசத, தேனேறுமலர்க்குரவங் கமழ்குழலாளடிககமலஞ சிரமேல்வைய பாம். (ரு)

## சபாபதி.

விரிசடைமின்ஞெளிவிரிப்பப் பகீரதிவெண்டிரைபுரட்டமிளிர்பூ ஙகொன்றை, சொரிநறுஞ்செநதேன்றுளிப்ப மலைமகள்கண்ளிைங்க ளிபபச சுடர்க்கண்மூன்றும், புரிபவுரியினிறசுலவத் தமருகநாதங்க றஙகப் புவனம்வாழப், பரிபுரவேதஞ்சிலம்பப் பொதுநடஞ்செய்ப ரமபொருளைப் பணிந்துவாழ்வாம். (சு)

## தூக்காதேவி வேறு

கருநடஙகழிகருமீசன் கடுமுயலகன்மேற்றுன்செய
திருநடமிதறகொவ்வாதென் செய்துமென்றிருக்கவெறபி
னுருநடந்தனையமேதி யுயர்சிரநெரியநின்று
பெருநடஞ்செய்யுநதெய்வப் பிராட்டியைவணககஞ்செயவாம (எ)

## விநாயகா வேறு.

திருநான்மறைசசங் கிலிக்கொணடுகில்லாது செகமேழுலாய
வருஞானமதமூற மணியாகவுதயாத்த மனவெறபையே
யிருபாலுமணியாப்ப னூராளையாளாந மிடையன்பொடு
மொருநூலின்யாப்பின்க ணிறகினறதிதுபோலு முளதியாதரோ ()

## சுப்பிரமணியா வேறு

கருமாவையரிவிழிப்பங் கயமாவைப்புணர்திருமால் கமலநாபிப, பெருமாவையகம்படைககும் பிரமாவையுறறுணராப பிரணவததி ன், குருமாவைநுகாவதுவே குணமாவைகளும்புனஞசெல கோட மொவைப், பொருமாவைவேறகுமரன புதுவிரைத்தாமரைமலாத தாள் போறறல்செய்வாம் (கூ)

## திருநநதிதேவா

கரியமணிகணடனைசசெங் கணணுதல்வானவனைமுனிக ணஞ சூழ்வெள்ளித், திருவரையிற்றனிமுதலைப் பசியநறுஙகொடியினொ டுந தெரிசித்தேத்து, மரியயனிந்திரனமரர் தமையுமடியாரெனத்த னடிகளுளாக்கும், குருமணிவேத்திரத்தடககை நந்திதிருவடிமுடி மேற தொண்டுவொழ்வாம். (க0)

## கலைமகள். வேறு.

உரைத்தமிழ்மூவர்நாவி னூற்றெழுமமுதைச்சங்கத்
திருக்கும்வெண்முத்தைகற்றோ ரென்னுமீக்கூட்டுந்தேனை
வரைத்தமிழ்முனிவனெஞ்ச மலர்ககமலபூஞ்சேக்கைத்
திருத்தகுமரசவன்னப் பேட்டினைச்சிந்தைசெய்வாம். (௧௧)

## திருஞானசம்பந்தமூர்த்திநாயனார். வேறு.

பெருமுலைப்பாலகன் * பிரமன்கண்டறியாப் பெருந்தகைமேற்
பொருமுலைப்பான்மெழுகி னுளமபுரைந்துருகத் தமிழ்பாடு
மருமுலைப்பாலரும் பனையமணிமுறுவன் மலைமகளார்
திருமுலைப்பான்மணங் கமழவாயச்செல்வனை யாமபரவுவாம். (௧௨)

## திருநாவுக்கரசுநாயனார். வேறு.

மண்ணாசை † பெண்ணாசை மூன்றுநீத்து மனத்தாசையறவெறிந்தா னந்தநீர்பாய், கண்ணாசைசிவபெருமான் காட்சிக்காககிக கருத்தாசையவனருட்கே கைம்மாறாககி, யுண்ணாசைமருந்தனையாா புகழூர்மன்னு முழவாரப்படையாளி யுருகிப்பாடும், பண்ணாசைத்திருநாவுக் கரையன்பாதம் பத்திபழுத்தொழுகநெஞ்சிற் பதித்துவாழ்வாம். (௧௩)

## சுந்தரமூர்த்திநாயனார். வேறு

ஏற்றுயர்கொடிநங் திருமுதுகுன்றத் திறைவரைப்பொருள்குறித்தேத்திச், சாற்றியபதிக விலையெனத்தனக்குத் தரும்பொருண்முழுவதுமணிமுத், தாறறினிலவீழ்த்திக குளத்தினிலெடுத்துப் பரவையிலன்றுபுக்களித்தோன், சேற்றினிலவினையாச் செழுமலர்க்கமலச் சேவடிசென்னிசேர்த்துதுமே. (௧௪)

## மாணிக்கவாசகசுவாமிகள் வேறு.

வார்மாலைமுலையுமையாண மணவாளன்மலர்ககழற்கீழ்த
தார்மாலையெனஞானத தமிழ்மாலைததும்பியக
ணீர்மாலையுடன்சாத்தி நிகழ்வாதவூரடிகள்
சீர்மாலைபாடுமவர் சேவடியென்சிரமீதால். (௧௫)

---

* முல்லைப்பாலகன் - விட்டுணு.

† ஆசை - பொன்.

சோழாந்தகபாண்டியன். வேறு.

தெண்ணிலவின்வழித்தோன்றிச் சயம்புதெரிசனவிரத சீலமேற்
கொண், டெண்ணின்மறைவித்தினையோர் முளையிடங்கண்டிடபபு
ரத் திறையோன்கோயி, லுண்ணிலவுமானமுதற் றிருப்பணிசெய்சு
குணனையீன் றுலகங்காத்த, தண்ணளிவெண் குடைச்செங்கோல்
வழுதிசோழாந்தகன்றா டலைமேற்கொள்வாம். (கசு)

சைவவேதியன். வேறு.

சோதியனைப்பொன்னிதழித் தொடையானைநிலவெறிக்கும்
பூதியனையாப்பனூர்ப் புண்ணியனைப்பெண்ணியலும்
பாதியனையருத்தமனைற் பாகச்சோறடுஞ்சைவ
வேதியனைப்பணிமலர்தூ உய்மெலலடிப்போதிறைஞ்சுவாம். (கஎ)

சூதமுனிவர். வேறு.

மூப்பழுத்தருஞ்சொலவேத முனிக்குழாந்தொழுதுகேட்பத்
தீப்பழுததனையவேணித் திகம்பரன்சிவபுராணங்
காப்பழுத்துமிழுந்தெய்வக் கனித்திரள்சிவணவாய்மை
நாப்பழுத்துமிழுஞ்சூத நற்றவமுனிதாள்போற்றி. (கஅ)

சண்டேசர. வேறு.

புரிசடைமேன்முடிக்கிடந்த கொன்றையந்தார்முடித்தசிரம்போ
ற்றியீசன், றிருவுடைநன்குடுத்தமல னுண்டபரிகலத்தினுண்ணுந் தி
ருவாய்போற்றி, கருவிடைப்புக்குழலுமெனை யெடுத்தாண்டசண்டே
சக்கடவுள்சோதி, மருவுமழுக்கரம்போற்றி யருணிறைசெஞ்சரண
மலர் வனசம்போற்றி. (க௯)

கடவுள்வாழ்த்து முற்றிற்று.

---

## பாயிரம்.

—:o:—

மறைமுழுதுமளப்பரிய வாப்பனூருடையபிரான் மான்மியஞ்சி
ற், றறிவுடையயானளகசூர் தரத்ததோவத்தலத்தி னுதிசைவ, ரிறை
குலசேகரவழுதி நாமநம்பிமரபுதித்தோ ரின்னாரென்னாற், றுறை
முறையினியற்றெனவச் சொன்மறுக்கமாட்டாமைத் தொடங்கி
னேனால். (க)

## வேறு.

நறகடவுள்வணககம்பாயிரஞ்சொலவையடகக நயிமிசாரணியவருணனைசூதர்காதை, பொற்கமலச்சடைமூர்த்தியாப்பனாரிடப புரமனவினோதன்சந்திரசேனனூலிற், றர்க்கமுணர்பாட்களன்மெய்ககுபேரனெனுசுதரி சனனரிச்சந்திரனீருச்சருக்கமோரெட்டாய்க், கறீகநிறைவிருத்தயாப்பைஞ்ஞூற்றீரேழிற் கவிஞரவைமுறுவலிப்பககழறுதலுறறேனல். (௨)

## வேறு

கனியினைபபிழிநதுசெநதேன் கணடெனவாப்பனூர்நம்
பனிமதிமிலைநதநாதன் பன்னரும்புராணந்தன்னைப்
புனிதன்மெய்க்கந்தசாமிக் கவிஞன்பூவணத்தான்பார்மே
லினிதெனப்புலவர்கூற வின்றமிழ்ப்புணர்த்தினனே

பாயிர முற்றிற்று.

---

ஆக திருவிருத்தம். ௨௨

# அவையடக்கம்.

-:0.

வடிதமிழக்கவிஞர்யார்க்கும் விண்ணப்பமணற்சோறெப்ப
தடியனேன்கவியினகுற்றம் பார்ப்பதுமழகோவேணி
யுடுபதிமுடிக்குமாப்ப னூருடையவரும்வையைக
குடிஞையமணற்சோறந்நாட் கொணடருள்வழக்கான்மன்

திருவிருத்தம். ௨௩

# நைமிசாரணியவருணனை.

—:0·—

புன்னைபாடலந் தாடிமமரவம்பூங் குரவங்
கன்னிகாரமந் தாரமாபபழுமரங கடுகைகை
நன்னிரும்பல வருச்சுனம்வகுளம்வெண்ணாவல
வன்னிகூவிளஞ் செறிநிழனைமிச வனமே. (௧)

வேதவித்தெனு மருந்தவவுழவர்கண் மிடைந்து
தீதகற்றுநன் காலமோர்ந்துறுபுலன் றிருத்தி
யாதிபத்திமை வித்தியானந்தநீர் பாய்ச்ச
மாதவப்பயிர் விளைநிலநைமிச வனமே. (௨)

விதிமுனிக்கணம் புரிமகத்தவிசைை விண்ணோர்க
கதிகமுற்றமு துணவயர்த்தனு தினமுறலா

லெதிரில்கற்பக நறுநிழலேக்கற வெய்த
வதியுநன்னிழ லளிப்பதுநைமிச வனமே. (௩)

உரியவேள்விவா யவிவிழைந்தயன்வர வுடன்செல
பிரிவிலோகிம நெடும்பணைவதிந்துநாற் பெருநூ
றரியவோதுவ தடையுறிறறடையறத் திருத்தும்
வரிகொள்பூமபொழிற் கிளிகள்சூழநைமிச வனமே (௪)

கரியவண்டெனுங் கணடிபூணடலர் முகங்கண்ணீ
வரநனைநதுமா கமணடலஙகையுற வாய்நது
பரவுபூம்பொடி யணிநதொருதாணின்று பன்னுண
மரனுமெய்ததவம் புரிவதுநைமிச வனமே. (௫)

கடிகையைநதெனத துயிலொரீஇககடிபபுன லாடிப
பொடியணிநதெழுத தனுசெணிப்புராணிகர் பாறபோய
நெடியவேணியன சிவகதைகேட்டுநெக குருகி
வடிகணீரின ரிருப்பதுநைமிச வனமே. (௬)

வேதவாகமவிதிவழிசசுத்தியை விதனுசெய
தாதரத்திறை சிவனையர்சசிதததன் பயனைப்
பூதநாயகன் கரமிசைப்புனலொடு வழஙகு
மாதபோதனர் சரிபபதுநைமிச வனமே. (௭)

அடைவிலாணடொன்று பததுநூறுயிர மயுதங
கடைசெலச்செல வோருயிரப்புயிரததுவன் கழுமுட
படையினர்சிவ யோகமெய்யசைவறப பயினு
நடையினரிட வகையதுநைமிச வனமே. (௮)

வானமேன்மண்ணி னவனவளதுவெனும் வழககற
றானமிலபல வுயிரகருயிராய்நிற்கு மொளியை
யேனைவேதததுமுடிவையோநதிரண்டற விருக்கு
ஞானசாதனர் பயிலிடநைமிச வனமே. (௯)

வேறு

பாதவந்தனைக் கற்பகம்பார்த்தபின்
பாதவந்தனைக் கற்பகம்பற்றுறு
மாதவந்தினஞ் செய்யும்வன்றேர்விடை
மாதவந்தி * னஞ் செய்யுமீவிலவேள்வரில். (௧௦)

நைமிசாரணியவருணனை முற்றிற்று

---

ஆ. திருவிருத்தம். ௩௩.

---

* விடைமாதவந்து - இடபமதியாகிய வைகாசியிலுளதாகுந தென்றல்.

# சூதனாவிஞய காதை.

அவவருந்தவவனத் துறையுமந்தணர்
ஐவரும்பணிமுடிப் பரனைநோக்கிதங்
கைவருஞ்சுருதியின் கருமங்காமுறு
மெய்வருஞ்சத்திர வேள்விசெய்கின்றா (௧)

அவ்விடைக்கனறளிர்த் தனையவேணியன்
வெவ்விடைக்கடவுணீ றணிந்தமெய்யினன்
வெளவிடைக்கசைத்தவற் கலையன்மாதவங்
குவவிடைத்தனியுருக் கொண்டகோலத்தான் (௨)

திரைசெயநீர்க்கமண்டலன் சிவபுராணமென்
றுரைசெயுமமுதமூற் றூறுநாவினன்
கரதலஞ்செபவடங் கிடந்தகாட்சியன்
புரையறுசிவத்தியா னஞ்செய்புந்தியான். (௩)

நணணியமறையெலா நான்கெனப்பகுத்
தெண்ணியவியாதன்மா ணாக்கரேறனான்
புண்ணியந்தவழ்முந்நூல் புரளுமார்பினன்
மணணுறுமயனிகர் சூதமாதவன். (௪)

வந்தனன்வருதல்கண் டெழுந்துமாதவர்
சிந்தைமுந்தெதிர்கொளச் சென்றுதாழ்ந்துநின்
றந்தமின்முகமனோ டாசனங்கொடுத்
தெந்தைநீயிருத்தியென் றிருத்தினாரரோ (௫)

அருக்கியமுதலிய திருத்தியன்பகம்
பெருககியபூசனை முடித்தபின்னவர்
திருக்கிளர்பதமிசைத் தானுஞ்சென்னிதாழ்த
துருக்கியமொழிசில வுவந்துகூறுவான். (௬)

சந்திவந்தனைசெபந் தபந்தியானநன்
மந்திரமறைமுதல் வலியவேழியன
நந்தியதிலையென நவின்றுவாக்கொடு
புந்தியுமொருவழி பொருந்தக்கூறுவார். (௭)

வேறு.

மருங்கொளிபரப்புஞ்சைவ மணிக்கதிர்விளக்கேவேத
மொருங்குணருணர்வேகேள்வி யுதமபதினெண்புராணப்

பெருங்கடற்கரையேஞானப் பிரளயவடிவேயெங்கட்
கருங்கிதந்துணையேசூத முனியருந்தவனேகேட்டி. (அ)

பண்டுநீயெமக்குமுக்கட் பரனுறைதலங்கணமேன்மை
விண்டுமேற்றவறருளயாதோ விசிட்டமென்றகத்துணமோகங
கொண்டுழலகின்றேமோகக் குவைவிருள்புலரசசோதி
யுண்டுமிழகதிரபோலின்று மொருதலனுரைக்கவேண்டும். (௯)

வேறு.

என்னலுஞ்சூத முனிவரனிதயத் திருநதமிழாப்பனூரவிமலன், றன்னையுங்குரவங கமழ்குழலுமையாந் தாயையுந்தலையுங்னையா, கன்னறுங்கமல நயனநீரருவி நனைப்பமெயம்மயிர்ப்புளகுதிப்ப,மன் னுநன்பதுமாசனத்தினினொடும் போதிருந்துளநெகிழ்ந்துவாயமல ர்ந்தான். (௧௦)

அந்தணீர்நீவிர் வினவியதிவ்வுலக வனுக்கிரகத்தினேதுவுமாம, பந் தவல்வினைதீர்த தருள்வழிகாட்டும் பரிசுமாமுரைப்பலயானென் று, நந்தலிலகுருவாம் வியாதனைப்புழைகைகை நாதனைகருகனையாப புடைய, மைநதனைக்குரவங் கமழ்குழலுமையை வணங்கினன்வ ணஙகியீதுரைப்பான். (௧௧)

சாற்றியபுராணமோராறுமூன்றுட் சைவத்திறசேத்திரகூண்டத, தேற்றியவேகாதசவுருத்திரசங்கிதையினிலீறிலானருளாற், றேறறி யவிடப புரியின்மான்மியத்தைச் சொற்சுவைபொருட்சுவைதோன் ற, வாற்றியதவத்தீர் சொல்லுகேனுலக மறம்பொருளின்பம்வீட டைய. (௧௨)

சூதனாவினயகாதை முற்றிற்று.

---

ஆ திருவிருத்தம். ௬௫.

## மூர்த்திமகிமை.

———:o:———

இந்தமாக்கதை முன்னைநாட்கயிலையி னிடத்திற்
கந்தவேணந்திநாதனுக்குரைப்பவக் கதைகேட்
டெந்தையென்குரு வியாதன்மற்றெனக்குரை செய்தா
னந்தவாறுரை செய்துநீரசைவறக் கேண்மின். (௧)

தேனிலஞ்சிலை குனிப்பவன்செருநிலைக் கூர்மக்
தானிலம்புகுமிடமெலாந்தமிழ்மணந் தழைக்க

வர்ணிலங்குதண் முதிவழிமன்னவ ரிருந்த
நானிலம்புரந் தாள்வதுமதுரையந் நகருள். (௨)

முத்தருக்கரு ளாலவாய்ச்சுந்தர மூர்த்திக்
குத்தரத்தொரு கூவிளியெல்லையின் விடையி
னுத்திரிக்குமோ ரோசனைதிருநிதிக் ககன்று
தத்துநீர்வையை வடகரையிருக்குமோர் தானம். (௩)

கொன்றைபாதிரி கூவிளம்பிப்பிலந் குரவந்
துன்றுமேழிலைம் பாலைசந்தனமகில் சூத
நின்றபூகத மரம்பையாசினியொடு நெருங்கு
மன்றன்மல்லிகை முல்லைமாதவிகடி மயிலை. (௪)

மற்றுமென்னினிப் பகர்வதுமரமெலா மவண
துற்றுமென்மலர் சூழுகொடித்தொகையெலாமவண
பற்றுநாணமல ரளியுறுவமரர்பைந் தருவுங்
குற்றமிலவல்லி சாதமென்கொடியுமே யிலாத (௫)

ஓலநான்மறைப் பொருள்வெளிப்பட்டென வுலகின்
மேலதாகுமத் தலத்தினில்விரிஞ்சன்மா லுணரா
மூலகாரண லிலிங்கமொன்றருளினுன் முளைத்துச்
சாலநீளொளி யுருவமாயங்கனந் தயங்கும். (௬)

அத்தனிச்சிவக் கொழுந்திறுக்காப்புடை நாத
னெய்த்தவர்கருநிதியெனுமிடபபு ரேசன்
மெய்த்தவர்க்கருள் வடிவமாமன்னவி னோதன்
வித்தகத்திரு நாமமீதவனிமேல் விளங்கும். (௭)

வையகீடணி யாப்பனூரிறைவனை வணங்கப்
பொய்யிலன்புகொண டெழுந்திருந்திறபுறம் போந்தா
லையமிலவையோ ரடிக்கொருபரிமகத் திரும்பே
றெயதும்போய்த்தெரி சிக்கிலெண்சித்தியு மெய்தும். (௮)

வேறு.

அடைந்துதிருவாப்பனூ ரடிகளைக்கண்டிடப்பெற்றோர்க கனே கநாட்பின், றொடர்ந்தபழவினைபுதிய வினையிரண்டுங்கனல்குளிரச் சுடுந்தீவெய்யோன், மிடைந்தகடுங்கதிர்பரப்பக் கடல்சுவறிநிலம் வெடிக்கும் வேனிற்காலத், துடைந்தசிறுகுளநீரொத் துலர்ந்துப சையறவறக்கு முண்மைமாதோ. (௯)

பணியாப்பனூரரவ மணிந்தபிரான்கொன்றைவனப் பரமன்வை யை, யணியாப்பனூர்க்குடையா னணியகரும்பட்டுவிலை யளர்துக

றிற், றணியாப்பனூற்கலிங்க மளித்தவர்புத்திரபவுத்திர சம்பத்தோ டெங், குணியாப்பனூறுபொறிப் படஞ்சுமக்கும்புவியில்வளங் குலவ வாழ்வார். (௰)

உயரிடபபுரியீசற் காகநறும்புதல்பதிவைத் தொருபூவேனும், ப யனுறுவெணமதிமுடியிற் றரிப்பித்தோருடன்முழுதும் பாரிசாத ந யனுறுவாசந்திகழக் கயிலாயத்திருப்பர்நந்தி நகரநாதற், கியலுநறுந் தூபக்கால கொடுத்தவருமப்பயன்பெற் றிருப்பர்மாதோ. (௧௧)

பெருவிலைக்கப்புரங்கலந்த நறுந்தேய்வைகுறிகுளிரப் பெய்விப் போர்மெய்ச், சுருதிசொலாயிரவாச பேயபலனடைவரொரு துளி நெய்த்தீபம், பருவரைவிற்குழகனுப் புடையனுயகன்முன்னர்ப் பா ர்ப்போர்தங்க, ளருவினைப்பற்றொழியவா யிரவகபிலைத்தானப்பேற டைவர்மன்னோ. (௧௨)

பரன்முடிமேலிளநீரொான் றூட்டினூறயமேத பலன்கைக்கொ ளவா, ரரன்முடிப்பாறயிராட்டி னவனுலகினுடன்விளையாட் டயர் வார்ஞானத், திருமருவுமன்னவிறே தனுக்கன்னவபிடேகஞ் செ ய்விப்போனிக், கருமகிலத்தெவனவன்கொள் காணியொருபிரமக ற்பங் கயிலையாமால். (௧௩)

கருப்பஞ்சாறன்னவிறே தனுக்காட்டினவனுலாங் கதியிற்சோ ஙன், றிருப்பஞ்சாமுதமாட்டி விசித்திரபோககமுகிவே தித்தோர் கோயில, விருப்பஞ்சார்பணிபுதுக்கி ஞேர்பலத்தைச்சன்னுமுனி விளக்கும்வேள்வி, நெருப்பஞ்சாறணிகடவு ளறிநதுளைப்பனலதெ வரே நிகழ்த்தற்பாலார். (௧௪)

இப்பொழுதிங்ஙனமுரைத்த பணியியற்றற்கேதுவிலா ரெனினு ஞ்சார்ந்து, முப்பொழுதினொருபொழுதா யினுமாப்பனூருடைய முதலைப்பாகச், செப்பெழுதமுலையுமையைச் சூழ்ந்துபணிந்துள்ளு ருகித் தெரிசிப்பாரே, லப்பொழுதின்வினைநீக்கி யழியாதபதமளிப் ப னருளின்மூர்த்தி (௧௫)

வேறு.

பரக்கவென்பல பகர்வதுபத்தியோடமைந்து
புரக்குமாப்புடை நாதனுக்கீந்தைகப்பொருடா
னருப்பமென்னினு மனந்தமாக்கொணடரும்பவங்கண்
முருக்கியிம்மையும் புரந்துபின்றரும்பரமுத்தி. (௧௬)

வேறு.

வரைகளிற்சுடர்சூழ்வளைசுரபிகளின் வானிலானுமெக்கழின்மதி யங், கரையிலவொளியிற் பருதிதாதாவிற் கரும்புயல்பறவையிற்கலு

மூன், றரைவிலங்கினத்தின் மடங்கலூர்தியிற் குஞ்சரமிருகாலினு ளுயர்ந்தோர், புரையினுற்காலிற் பசுவியக்கரிஹூர் புட்பகன்புருடரீ ற்றிருமால். (கஎ)

மாதரிற்கௌரி மனுவினிற்பிரண வம்பணைமரத்தினச்சுவத்தம், யாதவர்குலத்திற் கண்ணன்மற்றின்ன வெவ்வகையதிகமவவகை போற், றூதவிழிதழி வனத்தினுப்புடைய சயம்புவேசயம்பினுளதி க, மாதலின்வழிபட் டவர்பிறபதியு ளருச்சனைப்பலனெலாமடை வார். (கஅ)

ஆப்புடையமலன் மகிமையையனந்தற் கனந்தம்வாய்படைப்பி னுநவிற்ற, நாப்புடைபெயரா வெனிறெருவாயா னவிற்றுதற்கொ ணணுமோதவத்தின், மூப்புடையறதநீ ரென்றனன்கேட்ட முனி வரர்குதூகலித்திருகட், பூப்புடையருவி பெருகவானநதப் புணரி யங்கடலிடைப்புக்கார். (கக)

பின்னருமுனிவர்செவிச்சுவைநிரப்பும் பெருங்கதைச்சூதனைநோ க்கி, முன்னராப்புடையா னிடபபுரேசன் முதுமைகூறன்னவிறை த, னென்னநீநாமஞ் சொற்றனைமூன்று மெவ்வழியெய்தியததனை, யின்னநீவிரித்து முறையினுற்கூறென் றிறைஞசலுந்தாபதனிசை ப்பான் (உ0)

மூாததிமகிமை முற்றிற்று.

---

ஆ திருவிருத்தம். கூரு.

# ஆப்பனூர்ச்சருக்கம்.

:O:

அனைத்துமோதிய புராணநூறபொருணமுழு தாய்ந்தாய்ந்
தெனைத்துமோர்ந்துயர் சிவகதைமுழுதறி யெனகரு
நினைத்தபோதெலா மற்புதந்தருங்கதை நியமந்
தனைத்தடாதுளீர் சாற்றுவன்கேள்மெனச் சமைந்தான் (க)

வாமமீனவன் மதிக்குலமடந்தையை மணந்து
தாமநாண்மலர் முடிகவித்திருந்துசெஞ் சடைமேற
சோமநாயகன் சுந்தரநாயகன் சுருதி
நாமநாயகன் புரந்ததுமதுரைமா நகரம். (உ)

உடுத்தநீரகழ் புரிசைகோபுரநிலை யுயர்வா
னடுத்தணுளிகை மாளிகையுபரிகை யரங்கந

தொடுத்தசாளரம் பித்திகைமண்டபந் தொகைகண்
டெடுத்தவானவர் தச்சனுமிசைப்பரி தின்னும். (ரு)

சாலநீள்சுடர் மணிகளிற்றனித்தனி சமைத்த
கோலமாளிகை மீச்செலுமீச்செலுங் குணத்தா
னீலமாய்மிளிர் செம்மையாய்வெண்மையாய் நிறம்பொன்
போலவாயுருத் திரிந்திடும்பகலவன் புரவி. (சு)

பருமணிச்சுடர் மேனிலைவதிந்துபைந் தொடியார்
கருமுகிற்குழற் கூட்டகினறும்புகை கதுவுஞ்
சுரநதிப்புனல குடைபவர்கூந்தலோ துகிலு
மருமலர்த்திரு மேனியுங்கமழுமவ் வாசம். (ரு)

பழுதில்வெற்பெனப் பணைத்தெழுமுலைகொண்கர் பருங்கை
மெழுகெனக்குழை யுறப்புணர்மின்னனா ரிமையா
தெழுதுசித்திர மனைவயினெளித்திடி னிளைஞர்
முழுதுமெய்ப்பட நோக்கினுமறிந்திட முடியா. (சு)

அனையதூணவை போதிகையன்னதுத் திரமே
லினையபொற்றுலா மெனவிதந்துரைப்பவ ரெவரோ
கனைகடற்படு கதிர்க்குமம்மனைகளிற் கைசெய்
வினைதெரிக்கில விழுமொளிமணியொளி விழுங்க (எ)

மகிழ்வினெவ்வெவத் தேயமாக்களுங்கொள வரினும்
புகலுமோர்சிறு விலைப்பொருணமுதலபொன் கோடி
தரும்விலைப்பொரு ளாயினுங்கொளக்கொளத் தாழா
மிகவளம்பழுத் துமிழ்வனவாவண வீதி. (அ)

கோதிலாதசெஞ் சூட்டுடைவாரணங் கூவ
வோதஞாலத்து மற்றையதலத்துளார் விழிப்ப
ரீதலேற்றலோ டறுதொழிலிருபிறப் பாளர்
வேதநாததின் விழிப்பதவ்வியனகர் மாக்கள். (கூ)

வேதபாரகர் வேந்தர்களுய்கரேர் வினைஞ
ராதியாயபல் வருணருட்சமையிக ளளவில்
பூதநாயகன் கயற்கணாள்புணர்மது ரேசன்
பாதசேவையர் சீவன்முத்தரிற்பயில் பதியால். (கo)

அந்நகர்க்கிறை யரும்புகார்நகர்க்கிறை யாதி
யெந்நகர்க்கிறை யேனும்வந்திணையடி யிறைஞ்சப்
பொன்னகர்க்கிறை மணிமுடிதகர்த்துநீள் புயத்திற்
பன்னகர்க்கிறை பரித்தபார்முழுவதும் பரிப்போன். (கக)

மொழிந்தநற்கலை முழுதறிமுறைமையி னமுதம்
வழிந்தபார்வையிற் குவலையமுவகைகூர் வகையிற்
கழிந்ததிக்குறும் பகையிருமணிக்கும்வாட் கரத்திற்
பொழிந்ததன்புகழ்க் குலமுதற்றலைவனைப் போல்வான். (கஉ

அளவில்பாற்கடற் றன்குலமதிமுளைத் தாங்குத்
தளர்விறீஞ்சுவைத் தமிழ்க்கடன்முளைத்ததண் மதியோன்
கிளர்நெடுந்திசை விளககுதண்சுடர்க்குநாட் கெழுமி
வளர்வுந்தேய்வுமைந் துறப்புணர்த்திடப்புகழ் வளர்த்தோன்.(கங

கடைதவிரறமு தற்றிரிவருக்கமுங் கலப்பத்
தடையில்சாமமு ஞஞ்சதுர்வருக்கமுஞ் சார்ந்தோ
னுடையதான்றமர் பகைஞர்வன்கள்வரூர் விலங்கா
லடையுமைம்பய வருக்கமுந்துடைத்தர சாள்வோன். (கச

திறம்புகாமமுன் னுமறுபகைவற்கந் தீர்ந்தோ
னுறும்படைகுடி கூழமைச்சுநட்பர ணுடனே
பெறுஞ்சுவாமிய மென்னுமேழ்வருக்கமும் பிறங்க
வுறங்கிடாதுசென் னேமியொன்றுருட்டிமண் புரப்போன். (கரு)

இரதஞாயிறெற கெழினுமீறுயிர்க்குறி லேனும்
வரதபூரண சச்சிதானந்தசின் மயமாஞ்
சரதநீள்குறிச சயம்புநற்றெரிசனந் தவிரா
விரதசீலனென் றெவ்வுலகமும்புகழ் மேலோன் (கசு)

வேறு.

தேனேந்தியமல ராள்காந்தனைநிகர் சீர்வாய்ந்தவனெதிர் பொரு நேரா, ரூனேந்தியவடி வேலேந்தலின்மயி லூர்சேநதனிவரு மு யர்கோமான், மீனேந்தியகொடி யால்வேந்தரிணிவன் வேள்வேந தெனவெழி லுடையோனீள், வானேந்திசைதிகழ சோழாந்தக னென வாழ்பாணடியன்முன முளனோர்நாள். (கஎ)

மருவேட்டம்புயன் மதியாற்கண்டன வகைகாட்டுங்கவி னிறை தேருந், தருவேட்டங்கைவிண் மிசைநீட்டுங்களி தருகோட்டும்பலு ம்வயமாவு, முருவேட்டங்கச னுழல்வாட்செங்கைய ருலையாசசங்க முமுடன்மேவத், திருவேட்டஞ்செயும் வினைவேட்டிந்திர திசை மேற்சென்றனன் விரைவாயால். (கஅ)

கண்குடைசோதி யுமிழ்ந்தொளிநீணமுடி கண்டவராதவ னெ ன்றேற, வெணகுடையேமதி தண்கதிர்சாமரை விண்டிடினேரெ னவெஞ்சேனை, மண்குடைதூளி கருங்கடன்மேடுற வந்திகர்மாக

தர்கொண்டாடப், பணகுடையாவரி வண்டுகேள்பாடுறு பைந்தொ டைமார்பணடந்தானுல. (ககூ)

வானுறுமுழல்கயல் போன்மீனுறுகொடி வார்சேணசைதர வடல வீரர், சேனுபதிமுத லானேர்குழுவொடு சேராவுழையனை யழையா வன், கானுநெரைமு னேவீனொமலர்க் கான்மேலணிதரு கழலோ ய்முன், போனுளொ ளும்வெள் வேன்மீனவனெறி போதாவனமெ திா புகும்வேலை (உ0)

தொடுதோறுயில்புரி யிருகால்மறவர்கள் சுருள்வான்மடிசெவிநெ டுநாய்க, ளொடுவார்வலையொடு படர்பார்வையினெடு முழல்மான்ம னைகலை வனமேதி, கடுவாயுழுவைபன் முயல்சூகரமொடு களிறேறு ளியமின் னவைசூழப், படுகானிடையொடி யெறியாவலைகொடு வ ளையாவுடனெதிர் பலர்மீளா (உக)

அரைசன்முன்வந் தடிதொழுதுவிலங்கின மளவிலவிங்குள வலை வாரால, விரையவளைந்தன மெனவுரைதந்தனர் விருதாகணம்புடை புடைசூழ, வரைபுரைபஞ்சவன் வரிசிலைசெங்கையில் வளையநடந் துழை வருவோரைக், கரையில்பயங்கொடு விருகம்வெருண்டெழு ல கருதிமினென்றன னனலோடும் (உஉ)

கூவிளிபம்பை தடாரிபெரும்பறை கோடுவலமபுரி துடியோசை, மேவலினணட கடாகமுடைந்தென வீறியகம்பலை யதுகேளாப், பாவவிலங்கினம் யாவும்வெருண்டெதிர் பாய்வதுகண்டடு சிலைவீர ா, தூவியவன்கணை மாரிசொரிந்தனர் சோரிபரந்தன நதியேபோல.

வாய்கிழிவனசில காறுணிவனசில வாலறுவனசில கழிதூரம், போயயர்வனசில கூய்விழுவனசில போக்வழிதெரிகில சிலவாழி, பாயுடலினசில வீழ்குடரினசில பார்நகர்வனசில வெளியோடி, நா யதொடாவனசில வேனுழைவனசில நாள்கழிவனசில வனமாவே

வசையற்றிடுதமிழ் மதுரைக்கதிபதி வரிவிற்கணைசில வருகேழ, றசையுற்றிடுபுலி கரடிக்குலநிரை தனையுற்றுருவிய வனமேதி, யசை வுற்றிடுசெவி மதவெறபுருவியு மருவிப்புனலென வழிசோரி, பசை யற்றிலபடர் விசையற்றிலவிசை பகர்தறகரிதரி தெவராலும். (உரு)

நசைமயிர்துற்றிய கவரியரறறிட ஞமலியலைத்திடு மதுதேரிற், ப சையறுதூர்கருண வறிவிலிகைப்படு பதுமினியொத்திடு முடல்பீறி த், திசைதிசையுற்றிரி பல்விருகத்தின சிறுகுடர்சுற்றிய வரிலூடு, வி சைகொடுபுக்குழி முயல்வலையுற்றுழல் விதமெனவெய்த்துரு டரு மாதேர. (உசூ)

வேறு.

அவ்வழிவேட்டஞ்செய்யு மளவையினெருமான்வீரர்
கைவரிசிலையோட்டம்பின் கதியையும்பிந்தவாரும்
பெய்வலைதொடக்குந்தாண்டிப் பின்றொடர்நாயுந்தாப்ப
வெவ்வழிமானுந்தாவி யெய்ப்பறவோடிற்றன்றே (உஎ)

ஒணகதிகாட்டுமான்பி னுறுபடைத்துணைபின்னிற்ப
வெணகதிர்விலங்கின்கூட்ட மியல்வனதொருவனுகிக்
கணகவர்வனப்பின்வாய்ந்த சிலையொடுங்காலிற்சென்றான்
வெண்கதிர்மருமான்முன்போம் வெஞ்சுடர்மருமான்போலும். உஅ

மங்குலந்தரமேற்பாய்ந்து மண்ணிடைக்குதிக்குமானைக்
கங்குலங்குறையுங்கானிற் காவதமளாயிற்கூடித
தஙருலமதிக்குவுந்த தனிமறுத்துடைப்பானென்ன
வெங்குலவனைப்பொற்றோளான் கணையொன்றால்வீட்டினுனே. ()

சீதவம்புயநேர்பார்க்கச் செங்கதிர்செல்லுமேல்வை
தாதவிழ்நறுந்தேன்வேப்பந் தார்முடிச்செழியர்செய்த
மாதவமனையானெய்த்த வருத்தமும்பசியுமூளப்
பாதவநிழலிற்போகி யவசமுற்றயர்ந்தான்பார்மேல். (௩0)

மந்திரத்தலைவர்சேனை மள்ளர்மற்றியாருங்கூட
லிந்திரத்திருவன்கானி லெங்குற்றானென்னவோடி
வந்திளைத்தீண்டிவெந்தீப் பசியினால்வாடிப்போற்சாய்ந்த
சுந்தரத்தமிழர்கோனைக் காண்டலுந்துணுக்கமுற்றார். (௩க)

தென்னருக்கரசேவேத தூனெறிதிறம்புந்தேய
மன்னருக்கிடியேறன்ன மதிக்குலமணியேயெங்க
ளின்னுயிர்க்குயிரேயார்க்குங் கண்கணேயுணராயென்ன
மன்னுயிர்கவிறைவன்வாளா விடத்தல்கண்டயர்ந்துமாழ்கி. (௩உ)

அமைச்சியற்பாரம்பூண்ட வறிஞர்கள்விரைந்துசீதஞ்
சமைச்சலர்வாசநீர்தூந் தருந்தியார்தமைக்கூயுள்ளக்
கமைச்சினவேலான்கொண்ட விடாய்தணித்திடலுங்கண்க
ளிமைச்செதிர்விழித்துச்சோம சுந்தரக்கடவுளென்றான். (௩௩)

செம்புலம்படர்வெள்வேலான் சிறிதயர்வுயிர்த்தனோக்கி
யம்புவியரசேமானை யம்பிளையாட்டினெய்தி
வெம்புகானிடையித்தூரம் போந்தமெய்மெலிவையின்னே
யும்பரினமுதமன்ன வுணவுகொண்டொழித்தியென்றார். (௩௪)

இருந்துவாய்மலர்ந்துமெல்ல வியம்புவான்வேந்தன்மூலந்
திருந்தியசயம்புலிங்க தெரிசனஞ்செய்தாலன்றி
யருந்துதற்கடிசிலேயன் றகங்கையினமைந்தசாவா
மருந்துறிலேனுமாழி விடமெனமதிப்பேனென்றான். (௩௫)

துன்னெனுமொழிகேட்டுள்ளஞ் சோர்ந்துபின்றெழிந்துசொல்வா [ர்
புண்ணியப்பொருட்கும்வீயாப் புகழுக்குஞ்சாதனமாயிந்த
மணமெனுந்திருமான்பூண்ட மங்கலவணிபோற்றென்று
மன்னநின்மேனிக்கந்தோ வபாயம்வந்துறுமேயென்றார். (௩௬)

ஐயநாவசைத்துப்பின்னும் பார்த்திபன்பகர்வான்யாக்கை
யுய்யுமாறிம்மைக்கென்மே லன்பினாலுரைத்தீர்நீவி
ரையமின்மறுமைநோக்கி யளந்துணாத்தீரலீரிம்
மெய்யதாம்பொய்யைநம்பி விரதத்தைவிடுகிலேன்யான். (௩௭)

புன்னுனிப்பனியைக்காணற் புனலினைப்புனற்கோலத்தை
யன்னநீர்க்குமிழியைநீ ரருந்தியகமஞ்சுலவானை
யின்னவானகத்திற்றோன்று மிந்திரசிலையையேயு
மின்னுடற்பொறையைநம்பி விரததைவிடுகிலேன்யான். (௩௮)

நெடுமயிர்தசைநரம்பு நிணமெலும்புதிரமூளை
படர்குடர்நீருள்வீழ்நீர் பீமலம்பொதிந்துபுன்க
ணிடுமுடலகத்துட்டேசி லிருந்தவிவ்வுயிரையின்னே
விடுவதேயன்றிப்பூண்ட விரதத்தைவிடுகிலேன்யான். (௩௯)

என்றலுஞ்சூட்சிவல்லோ ரிவ்வனத்தணிதலுஞ்சேய்த்துஞ்
சென்றியாஞ்சயம்புலிங்கந் தேடுதுமென்னப்போகி
வென்றிவேற்செழியன்வீர விரதத்தினுறுதிநோக்கிந்
துன்றியதுயரினங்கோர் சூழலினிருந்துசூழ்வார். (௪௦)

சிறுமைகண்டறியாச்செல்வத் திருமதுரையர்கோனெய்து
மறுமையைநோக்கிவாளா விருந்திடின்மரபிற்பின்னர்
பொறைமைகூர்புவனந்தாங்கப் புதல்வரும்பிறருமில்லை
வெறுமையாந்தேயம்யாமும் வெளிற்றறிவுடையமாவேம். (௪௧)

நாமுயிர்துறப்பவேந்த னலியினுநலிகவின்று
போமுயிர்மீட்குஞ்சூட்சி யீதெனப்புணர்ப்பினெண்ணித்
தேமுயிர்த்தலர்ந்தகொன்றைச் செழுந்தருவடியிற்றென்ற
லாமுயிர்ப்பசையுநீழல் வாலுகப்பரப்பினங்கண். (௪௨)

நிவந்தவாளானமன்ன பெருமுனைநிறுவிநுண்ணூற்
சிவந்தபட்டாடைசாத்தித் தேய்வைமட்டித்துத்தாம

முவந்தணிந்தாரம்பூட்டி யுற்றுநேர்கண்டோருள்ளங்
கவர்ந்தழகெறிப்பக்கைசெய் வினையினாலிலிங்கங்கண்டார். (சங)

ஒருவர்பின்னொருவராயங் கோடிவந்தரசேதேடு
மிருவர்மற்றெவருந்தேறாச் சயம்புவந்தெளிதினிந்தப
பெருவனந்தனினினன்பிற் பிடியுண்டுபொன்பூங்கொன்றைத
தருநிழலிருப்பக்கண்டேந தம்பிரானருளிதென்று. (சச)

ஆடுவாரயனின்றுரைத் தழுவுவாரங்குமிங்கு
மோடுவாரானந்தம்போ லுனைமொழிகுழறிக்காட்டிப
பாடுவார்பாணடிவேந்தைப் பரவுவார்புளகப்போர்வை
மூடுவார்நயனநீருண முழுகுவாராகிமொய்த்தார். (சரு)

வழுதியுளுவகையீர்ப்பச் சயம்புவைவணங்கவுன்னும்
பொழுதிருகரமுந்தோர்ச்சித் துணைவர்கைபொருந்தப்பற்றப்
பழுதில்வெற்பசைந்தாலென்னப் பைப்பயநடந்துவண்டின்
றொழுதிசூழ்சடையிலிங்கஞ் சேணிடைத்தோன்றலோடும். (சசு)

பெரும்பெருக்கமுதைஞானப் பேரொளிப்பிழம்பைவேதச
சுரும்புசூழ்தாற்றுந்தேனைத் தூனறுங்கனியையெய்ப்பில
விரும்பினர்க்குதவும்வைப்பை வித்திலாமுளையைமுக்கட்
கரும்பினைவேம்பின்வேந்தே காண்கெனக்காட்டினாரே (சஎ)

காண்டலுங்கண்ணீர்வாரி கலாபுரண்டோடக்காவி
னீண்டகைகுவித்துப்பூண்ட நியதியைமுடித்துப்பின்ன
ராண்டகைமுகைவெண்மூர லருநதிநீர்பருகியன்பு
மாண்டமெய்வருத்தநீங்கி மந்திரர்க்குரைப்பதானான். (சஅ)

வாட்டிருங்கொடியகூற்றின் வாய்ப்படுமுயிரையின்னே
மீட்டிருந்தென்னையாண்ட மெய்ப்பரஞ்சுடர்தானிந்தக்
காட்டிருந்துறையக்கண்டுங் கண்ணிலான்போலவேகி
நாட்டிருந்துயிரையோம்பி நாட்கழிப்பதுவுநன்றே. (சகூ)

வேறு.

ஆதலினிச்செறிந்தபெருங் காடெறிந்துதிருநகர்கண் டரன்பொற்கோயில், காதலிற்கண்டிவனுறையச் சயம்புதிருவுளக்குறிப்புக் காண்பேனென்னப், போதலுந்தம்பெருமான்பின் போவார்போன் றெழுந்துமுகம் புலர்ந்துசாம்பி, நீதியமைச்சர்கணடுங்கி நின்றுநின் றங்கொளித்தாரந் நெடியகானுள். (ருo)

தனித்தனிபோயவர்மறையச் சிலர்தொடரப்போயடுத்துச் சயம்புமூர்த்தி, குனித்தசேவடிதொழலு மாப்புவடிவாயிருந்த கொன்

கைபாராப், பணித்தவளமதிவேணதன் றன்பிடித்தசிவவிரத பங்க
நோக்கி, மணித்தவுடலெடுத்தபயன முதலொடும்போயமுடிந்ததெ
ன வருந்தினானல. (ருக)

என்செய்தார்கற்பனையீ திருந்தவாறென்னேமற் றிந்தமாய, மு
ன்செய்தார்கதையுளுங்கேட் டிலனந்தோவென்னமொழி மொழி
கேனென்னாப், பொன்செய்தாரவன்வெகுளிமீகொளக்கண்சிவந்
துரப்பிப் புலிபோற்சீறி, மின்செய்வாளுறைகழித்து மந்திரப்பா
த்தலுங்காணான் விசாரததாழ்ந்தான். (ருஉ)

கொய்யவோபசிமுளைத்த குடரினைப்பின்பிரித்துணர்தல கூடா
நெஞ்சைச, செய்யவோபிளவுவிழித் திருந்தும்வெறுங்குருடடைந்
துதெரிடாநாட்டம், வெய்யவாண்முனைத்தொடவோ வென்றுபலநி
னைந்துடலை வெறுத்துமாழ்கி, யையவோவினைவலியீ தம்மவோ
வெனப்பொருமி யரற்றினானல். (ருங)

தரிப்பரோபிடித்தநிய மஞ்சிறிதுவழுவினுமெய் தடிந்தவ்வேலை, ம
ரிப்பரேமெய்யடியா ரிததுணைப்போதுடல்சுமந்து வாளாநின்றாற,
சிரிப்பரோயிவனடியார் போனடிக்குங்கள்வனெனத் தெளிவரோயா,
னரிப்பதேயவர்க்காணி லெனத்துணிந்துள்வாய்மையொன்று நவி
லவதானான். (ருச)

யானெடுத்தசிவவிரதப் பெரும்பத்திநெறிபிறழா திந்நாட்காறு,
மூனெடுத்தபயனடையச் சயம்புதெரிசனஞ்செய்த துணடேலிநத
த்,தேனெடுத்தமலரிதழி யடியினைப்பிதுகுறியாத் திகழ்கவன்றேற்,கூ
னெடுத்தவாளகொடுநன் மிடறரிந்துமாய்வனெனக கூறலோடும்.()

அவ்வுரைபோய்த்திருச்செவியி னுறுத்துதலுந்தரித்திலர்வந் தா
னேற்றைய,ரிவ்வுரைவான்மொழியானின் றியம்புவாரொமக்கினியா
யெம்பாலன்பா, செவ்வியநன்மதிமரபிற் றென்னர்சிகாமணியேநற்
செங்கோல்வேந்தே, யெளவியந்தீர்விரதநெறி யிழுக்கிலசோழாந்த
கனு மரசகேண்மோ. (ருசு)

நின்னுடையபேரன்பாலியாம்பிடியுணடலர்கடுக்கை நிழலிலோ
ரேழ், தொன்னிலங்கீழுருவி யாப்புடையலிசனெனத் தோன்றி
னேம்பாற், பொன்னனையாடனைக்குரவங் கமழ்குழலாளெனநிறுவி
ப்பூசிப்பாய்நீ, யென்னலுமம்மொழிவானின் றிழியமுதமெனச்செ
விபுக் கினிப்பக்கேட்டான். (ருஎ)

வேறு.

நீங்கினன்றுயரமன்பு நீடினன்கரங்கள்சென்னி
தாங்கினன்சிவபிரானைத் தழுவினன்புயங்களோங்கி
வீங்கினனுடிப்பாடி விம்மினன்விம்மிக்கண்ணீர்
தூங்கினனோடியோடி வனமெலாந்துகைத்தான்றுளளி (ருஅ)

பார்த்திபன்சிவன்மேல்வைத்த பத்தியுமவன்மேற்கொன்றைத்
தார்த்தனிமுதரன்வைதத தாழ்விலபேரருளுநோக்கி
யார்ததனர்வானோரைந்து கருவியுமாரப்பமென்பூத்
தூர்த்தனர்தென்னன்கீர்த்தி துதித்தனரிடைவிடாமல (ருகூ)

தான்கரைந்துருகியுள்ளந் ததும்புமானந்தவாரி
வான்கரையேறுதங்ஙன் வழுககிவீழநதெழுந்துமீணடுங்
கோன்கரையிவர்நதுதேவி கொணகரைப்பரவும்வேத
நான்கரைவணஙகியீறி னறறுதிமொழிநதுபின்னும (கூ0)

வளைமிசையணிகைசசிதை குவித்தமணமிசைநெல்வேலிக
கிளைமிசைமுளைத்தல்காதிற கேட்டனங்கணணிற்காண
முளைமிசைமுளைததாயான்செய் முற்றவப்பயனியாதோ
வளைமிசையவனுநதேறு வையனேயன்பர்வாழ்வே. (கூக)

அடியனேனினைததவண்ண மருளுருவாகியிந்தக்
கடிகமழுவனத்தும்வந்து காக்ஷிநீகொடுத்தவாறறூற்
படியினுமுளையவானப் பரப்பினுமுளைக்கொன்றை
யடியினுமுளையென்போல்வா ரகததினுமுளைநீயையா. (கூஉ)

நெளியராவணையிற்றுஞ்சு நீலமேனியற்குஞ்செந்தேன்
றுளியறுக்கமலநாபித் தோன்றற்குமமுதுண்வாழ்கைக்
களியறுதவர்க்குநாளுங் கனவினுமரியாயன்பர்க
கெளியையாய்வருவாயென்ப தென்னளவாயிற்றன்றே. (கூஙூ)

ஒற்றையாயெனையித்தூர மீர்த்திடுமுழைக்கும்வெம்மை
யிற்றைநாட்காறுந்தோன்று தின்றுதோன்றியபசிக்கு
முற்றையானின்னைக்காண முடித்தமந்திரர்க்குஞ்செய்யுங்
கற்றையஞ்சடையாய்கைமா றெவனெனக்கழறிநின்றான் (கூச)

வேறு.

ஒழியாதபேருவகை யுள்ளூறிவருமிதனை
யழியாதமதிநூலோர்க் கறிவிப்பானுழையோராற்
கழியாதபெரும்பயந்தீர்த் தழைத்திடலுங்கடிதேகிப்
பழியாதபுகழ்வேந்தன் பாதமிசைப்பணிந்தார்கள (கூரு)

அன்னவரைமுகநோக்கி யமைச்சீர்நும்வினையத்தா
லென்னையுயிர்மீட்பான் வித்தில்லாதமுளையென்முன்
சொன்னபொருள்குறிக்கொண்டு தோன்றியவாயாருமெனத
தென்னர்பிரான்மொழிந்திடலுஞ் சென்றிறைஞ்சிநோக்கினா ()

எவ்வுருவிலியாரொருவ ரிலயந்துள்குவாருளத்தி
லவ்வுருவதாய்த்தோன்றி யருள்கொடுக்கும்புண்ணியனென்
றெவவுலகுநதுணிபொருளை யின்றுவெளிசெய்வதறகோ
வெவவினையினேங்குறித்த வெளிற்றறிவாய்நின்றனையே (சுஎ)

செம்மைநெறியமைச்சுரிமை செய்வினையொன்றறியாத
வெம்மைவினைப்பழிநின்று மெடுததாண்டெங்கோமகறகு
நும்மையுந்தந்துயயக்கொண முதல்வர்முப்பரம்பொருளே
நம்மையுணர்வார்க்கமுதே சயசயவென்றேத்தினார். (சுஅ)

பொருமானைமுதலடும்போர் வேட்டையினிற்புகுந்தமதி
மருமானைமுறைமுறைபோய் வணங்கியினிதிவவனத்தி
னொருமானைத்தொடர்ந்தேவந் துள்ளன்பின்வலைவளைததுப்
பெருமானைப்பிடித்தனையே யெனமகிழ்ந்துபேசினார் (சுகூ)

நண்ணுதல்வானவனடியார் கணத்துளிவனொருவனென
வெண்ணுதலசெய்தீர்மாய மியற்றினீரலீரிருமை
நண்ணியதும்மாலெனக்கு நான்செயுங்கைமாறிலதென்
றுண்ணிலவுமுகமனுரைத் தொன்றுரைககுமனுவேந்தன். (எ0)

## வேறு.

நாலபுகத்திசைக்குங் கீடுவனமெறிந்து கடிநகர்கண்டுநீள்சிற்ப
நூல்புகசிவன தாலயம்வகுப்பீர் நுண்மதியீரெனவவருங் [ரும்பி
மேகால்புகத்துளைக்கொள் மராங்கர்பாராைக்கொடும்பணைமரநிரையி
னல்வகுத்தனைய வாக்கையமள்ள ராலெறிந்தவஞ்சிமிசைதிருத்தி. ()

கிடங்கர்சூழிஞ்சி கோபுரமறுகு கேழ்கிளர்மனைகள்செய்குன்ற, நடங்குலவரங்கங் கலைபயில்கழக நற்றவரிருக்கைநான்மறையோ,ரிடங்கவினரசர் வணிகர்பின்னவர்மற் றிழிந்தவுமுயர்ந்தவும்புணர்ந்து, ளடங்கியவருணத் தவரிடவகைசெய் தணிநகரமைத்தனர்பின்னர்.

அங்கணன்பரம னுகமவளவை யாற்சினகரமெடுத்தமைச்சர், இங கணன்மரபின் முதலடிதொழுது திருநகராலயஞ்செய்தே, நங்கணன்புடையா யெனவவருடன்போய் நோக்கியுண்மகிழ்ந்துநன்னுதலிற், செங்கணன்பூசை செய்வதற்காதி சைவரையழைத்தனன்றென்னன். (எக)

விதிவழிச்சிவனைச் சிவபரம்பரையை விரும்பிநற்பதிட்டைசெய் தவிசெங், கதிர்முதற்சண்ட னைப்பரிவாரக் கடவுளர்க்குறையுள் சூழ்கண்டு, புதியதேர்விழாக்கொண் மூர்த்தியும்வகுத்துப் பொன் முடிமணிக்குழையார, நிதிவளையாதி பலபணியுதவி நித்தநைமித்தி கநடத்தா. (எச)

காதிகாதலன்முன் றருகடலிதெனுங் காட்சியதொருபெருங்குள ங்கண், டேதமிலசாலி விளைநிலம்பிறவு மியறறியாப்புடையநாதர்க் கு, நீதிநூலறிவின் மறையவர்தமகு நேர்பகிர்ந்தளித்தனன்சிவன, தாதிகாரணப்பேர் தழுவியுங்கரு மாப்பனூராயினதன்றே. (எரு)

பூழியனோரண் டிருந்துழியொருநாட் புரிசைசூழ்மதுரையம்பதி யி, லூழியினொருவன் ருணிளைந்தெழுந்தங் கொல்லைபோயாப்ப னூருடையார், வாழியகுரவங் கமழகுழலுமையாண் மலரடியஞ்ச லிதந்தேத்தி, யாழியவன்பி ஞற்பிரிவாற்று தயர்ந்துநின்றனுமதிபெ ற்றே. (எசு)

வேறு

அன்படைமனத்தின னரன்றளிகடந்து
வன்படையெழிசசிசெறி வார்முரசியம்பத்
தன்படைமுதற்றலைவர் தானைகுழுமிக்கார்
மின்படைநெருங்கமிசை வெண்குடைவிளங்க. (எஎ)

பூமுகமடந்தையர்த னம்புடைகுலுங்கச்
சாமரைபணிப்பவரு தண்பவனநிம்பத்
தேமலர்மணத்தினொடு திணசிகரமென்றேட்
காமருதமிழ்ப்பொதிய வாரநறைகால. (எஅ)

மாறுபடுசெம்பியர் மடந்தையர்படீரச்
சேறுபடுகொங்கைகர மென்பனிவப்ப
வூறுபடுகொண்கரு திரங்கொடுசிவக்கும்
வீறுபடுசெங்கைவடி வாள்புடையின்மின்ன. (எகூ)

அன்னநடைவஞ்சியர்க ணீலமலரக்கா
லுன்னதநெடுங்குடையி னென்றுதவிரெண்ணேழ
மன்னர்கரபங்கய மலர்க்குலமுகிழ்ப்ப
மின்னவிர்மதிக்குலநல் வேந்தெனல்விளங்க. (அ0)

வ்குந்திடையிடைப்படு சயம்புமகிழ்தாணம்
புகுந்துதொழுதன்பொடு மிருந்திணிதுபோவா

னிகந்துதனகர்க்குவரு மிந்திரனிலின்ப
மகந்தரநிறைந்தமுது ராபுரியடைந்தான். (அக)

மண்ணுமணியன்னதிரு வீதிவலமாவந்
துண்ணிலவுகோபுரம் வணங்கியுளணைந்தே
வண்ணநிறைபொற்கமல வாவியிடைமூழ்கி
யெண்ணுமொருசித்திமத வேழமுனிறைஞ்சா. (அஉ)

தடம்படிகயற்கணுமை யைத்தொழுதுசார்ந்து
படம்படிசுமக்கநிமிர் பாம்பணிபுராணக்
கடம்படிமுளைத்தமுதல் கான்மலர்வணங்கி
யுடம்படிதொடுத்துமன மொத்துருகிநின்றான் (அங)

நின்றுதுதிசெய்துதிரு நீற்றொளிபழுத்த
குன்றுபுரையணைவிடை கொண்டெடநல்லார்
மன்றுழனிமஙகல மெடுத்தெதிர்வரப்போ
யென்றுமுளகோயிலு ளணைந்தினிதிருந்தான். (அச)

சந்ததமுமீசனிரு தாண்மலர்சிரங்கொண்
டந்திபகல்மன்னுயிர் தமக்கருளகங்கொண்
டெந்தறமுளைக்குமொரு கோலுயர்கரங்கொண்
டிந்திரனின்மிக்கரசி யற்றிவருநாளில். (அரு)

அங்கணர்சிவந்தசடை யாப்புடையநாதர்
தங்கருணையானது தனித்துருவமைந்த
திங்கிதுகொலென்னவொரு புத்திரனையீன்றான்
றிங்களினிளங்குழவி யென்றுலகுசெப்ப. (அசு)

உற்பவமகிழ்ச்சிவினை செய்துலகுவப்பச்
சொற்புனையுநாமகர ணஞ்சுகுணனென்றே
பொற்பவணிவித்தகலை யைந்தின்மதிபுல்கும்
பற்பலகலைத்தொகுதி கற்பனபயிற்றா. (அஎ)

வாள்வினையுமுற்றிமத மாக்கவனமாவூ
ராள்வினையுமுற்றிய தறிந்தவனிதாங்குந்
தோள்வினைகுறித்துரிய தொன்முறைமைநல்கு
நாள்வினையியற்றிமணி நன்முடிகவித்தான். (அஅ)

பின்னரிகபோகனனி துய்த்தொழிவுபெற்றுத்
தென்னவன்விரத்தியொடு சித்தமசைவற்றுத்
தன்னையுணர்தத்துவ வுணர்ச்சிதலைநின்றே
மன்னுதிருவாப்புடைய வள்ளலைநினைந்தான். (அக)

தார்புகுதடம்புயன் விரைந்தருடைழக்குஞ்
சீர்புகுகயறகனும்மை சேருமதுரேச
னேர்புகுபதந்தொழு தெழுந்தருளியாப்ப
னூர்புகநடந்துநிறை யன்பொடவனுற்றான் (௩௰)

கன்னிகுரவங்கமழ் குழற்கவுரிபாக
மன்னிநிறையாப்புடைய வள்ளறிருமுன்னர்
சென்னிமிசையஞ்சலி திருத்துபுநடந்தே
வன்னியிழுதொத்துருகி மண்ணிடைபணிந்தான். (௩௧)

வேறு.

உடல்குழைந்துருகமேனி யுரோமங்கள்சிலிர்ப்பக்கண்ணீர்
மடைதிறந்தொழுகநெக்கு மனம்பதைபதைத்துளின்பந்
தடையறப்பெருகச்செந்நாத் தழுதழுப்படையவேந்த
னிடையறுவன்பினானின் றிவ்வகைதுதிப்பதானான் (௩௨)

காரணகடவுள்போற்றி கடல்வருமாலகால
பாரணப்பரமபோற்றி பராபரயோகிபோற்றி
பூரணசசுடரேபோற்றி புண்ணியபுராணபோற்றி
யாரணப்பொருளேபோற்றி யாப்பனூருடையாய்போற்றி. (௩௩)

திரிபுரவிசயபோற்றி தேவர்கடேவபோற்றி
பரிபுரவேதநாத பஙகயததரசேபோற்றி
யெரிபுரமதனுககாவி யிரதியாலளிததாய்போற்றி
யரிபுரந்தரற்குமெட்டா வாப்பனூருடையாய்போற்றி, (௩௪)

உலகெலாம்நிறைந்தாய்போற்றியொண்டிறல்படைததவெஙகோன்
மலருளோன் * சாபமன்றி மற்றொருசாபமேரு
நலனுலாம்புஜைக்கைவேழ நாதனைப்பயந்தாய்போறறி
யலகில்சோதியனேபோற்றி யாப்பனூருடையாயபோற்றி (௩௫)

சுடர்மழுப்படையாய்போறறி சுருதிசொன்னடையாய்போற்றி
படர்நதிச்சடையாய்போற்றி பாலனப்படை † யாய்போறறி
யிடர்மனத்தடையாய்போற்றி யிவர்ந்தவெள்விடையாய்போறறி
யடர்தலைத்தொடையாய்போற்றி யாப்பனூருடையாய்போற்றி ()

மாக்கடலாவநந்த வனமடைப்பள்ளிமாயோன்
மேக்குயர்விடைகோல்காந்தை விளங்குமர்ச்சகன்மென்மெல்லப்

---

* வெங்கோல் மலருளோன் - வெவ்விய புட்பபாணங்களையு டைய மன்மதன்.

† பாலனப்படை - விட்டுணு

போக்குயிர்ப்பொருணால்வேத புராணவாகமங்களாக
வாக்குமெய்ம்மிறைவபோற்றி யாப்பனூருடையாய்போற்றி. (கூஎ)

வேட்டமதிலைக்குமென்னை மீட்டுயிரளித்துமுன்பு
காட்டகத்தறிவாய்வந்து காட்சிசெய்கருணைபோற்றி
நாட்டமூன்றுடையவெங்க ளையகபோற்றிபைவா
யாட்டரவணிந்தசோதி யாப்பனூருடையாய்போற்றி. (கூஅ)

என்னநின்றேத்தியீச னின்னருள்கைக்கொண்டேர்ந்தார்
மன்னனன்றப்பனூருள் வதிந்தனனுகவந்தத்
தென்னனின்றேத்துந்தெய்வத திருத்துதியரன்பொற்கோயின்
முன்னர்நின்றேத்துவோர்த முழுவினையொழிவர்மாதோ. (கூகூ)

வேண்டிமுன்றனையீர்த்தாட்கொள் விமலர்க்குசசிறந்தபூசை
தூண்டுதேர்விழாவுமுள்ளம் பெருங்களிதூங்கச்செய்தோ
ராண்டுறைந்தருளுநாள்வா யாப்பனூருடையவண்ண
னீண்டபேரருளும்வேந்த னுயுளுநிரம்பிறறன்றே. (க00)

வேறு.

இடைப்பரியபெருங்கதிக ளொருமூன்றுங்கடந்துபோய்க ளொவாணேமிப், படைக்கரியநிறத்தவற்கு நான்முகற்குமடைவரிய பதவிமேவி, விடைக்கடவுள்சிவபுரத்தி னவனுருவினுடன்கலந்து வேறற்றொன்றாயத, துடைத்தவிருவினைச்சோழாந் தகமாறன்விளங்கினன் றொன்னுண்மன்னே. (க0க)

வேறு

மேயவமுதியுயர்சோழாந்தகன்வீமெருவுகதையீதாஞ்சொலவோர், நேயமொடுசெவியின்வாய் மாந்தினர்நீடுபொருண்முழுது மாராய்ந்துளோர், தீயவினையொழிவாமே லாம்புகழுசேர்வர் குறைதவிரவேவாழ்ந்து, நீளாயுளிறுதியினிலாம்பதமாவ தண்டவரருள்கூர்ந்தரோ. (க0உ)

ஆப்பனூர்சசருக்க முற்றிற்று.

---

ஆ திருவிருத்தம் - ககூஎ.

# இடவபுரச்சருக்கம்.

—:o:—

இக்காதையமுதப் பெருந்தாளாநனைவித்த விருகாதுளீர்
முக்காலுமுமையொப்ப தியர்றொன்றுமகிழ்வுற்ற முனிகூதனை
யக்காலமுனிவோ ரொழுந்தஞ்சலித்தேத்த வணியாப்பனூர்
மெய்க்காரணன்பெற்ற நகரீசனுங்காதை விண்டானரோ. (க)

சுடர்சூழ்நெடுவேணி மிசையிந்துவழிவந்த சோழாந்தகன்
கடலசூழதரும்பார் பிரந்ீசனுடன்மேவு கதிசேர்ந்தபி
னடல்வாகைபுனைமீளி சுகுணப்பெயர்ப்பூழி யன்காமர்வெண்
குடைநீழலுலகின்க ணுயிர்வாழமுறைசெய்து கோலோச்சுநாள். ()

வீறுநிலத்தேவர் திரிகாலகருமத்தின் விலகாரதின்
மாறுதசெந்தீ வளர்தெநகும்வின் மாரி வருவிப்பர்வன்
பாறும்வேன்மன்னர் முதன்மூன்றுவருணததர் பல்கிப்பெறும்
பேறனதங்கன்மம் வழுவாதநெறிநிற்பர் பின்றார்களால். (௩)

மாரிக்குவித்தன்ன மடமாதர்கற்போங்கி மல்கும்பெருந்
தூரிக்குமுதலான பைங்கூழ்நிலந்தான் சுரந்தேவளம்
பாரிக்குநாளும் பலததோடிருக்கும் பசுங்காவெலாம்
பூரிக்குநல்லா னினம்பால்மிகுந்தே பொழிந்தூறுமால. (௪)

தானந்தவங்கலவி மெஞ்ஞானமின்பந தழைத்தீறிலா
வானந்தபோகந் ததும்புந்தமிழ்ப்பாண்டி யணிநாடெலாம்
வானம்பெருஞ்சீா விரும்புந்தகைத்தாயிவ் வளணம்பரு
ஞனந்தவிர்நதேபல் லுயிர்வாழவந்நாளி லோராண்டரோ. (௫)

வேறு.

மருவுகோணிலைதிரியமாரி வறப்பவேரிவறந்துபோய்ப்
பெருகுகூவலுநீர்சுருங்குபு பேருயிர்த்தொகையெய்த்திடப்
பொருவிலானினமாதிநாத்தலை புற்றலைப்படலின்றியே
திரியநீர்விளைவஃகிவந்தது சிறுவிலைப்படுநாளரோ (௬)

அந்தநாளணியாப்பனூர்வரு மந்தணாளர்களெண்ணியே
சந்தவான்மழையின்மையால்வரு தங்கள்பங்குநிலக்கணே
முந்தநீடுபெருத்திவித்தி முளைத்துவான்பயிராகமுன்
வந்தவாப்புடைநாதர்பங்கு வயற்கணங்கவரருளினல். (௭)

உண்ணுமேரியின்மண்டொடுங்குழி யுள்ளடங்கியநீரினல்
வெண்ணிறச்சிறுநெற்பயிர்க்கொள வித்திநாடொறுமாப்பனூ
ரண்ணலார்திருமேனிதீண்டுமொ ராதிசைவன்வளர்க்குநாட [ல்.
புண்ணியப்பொருள்போல்வளர்ந்து பொலிந்துபைங்கதிர்விட்டதா

சின்னிலத்துறுசாலிபைங்கதிர் நீட்டல்கண்டிருந்துநால்
மன்னர்முன்னவருன்னியுன்னி மனம்பொறாமலிவ்வேரிநீர்
துன்னுபாதியதன்றியேமுழு துஞ்சைவாகமவேதிய
னென்னவன்மைதனெற்பயிர்க்க ணிறைப்பதென்றுகுழாங்கொளா.

வீறுசேரங்கிலத்தினீடிய வெண்பருத்திகணீரிலா
நீறுகாண்குறயாமிருப்ப தெனிக்குளத்திருகூறிலோர்
கூறுநீர்நமதேயதற்கொரு கோதியாதுகண்வாயினுட்
சேறுகாணவிறைத்துநஙகுறை தீர்வமென்றுரைசெப்பினர். (௧0)

அன்னசெய்தியறிந்தயர்ந்திடு மாதிசைவருளுத்தமன்
என்னசெய்வமிதற்கெனுநெடி தெண்ணியெண்ணிவருந்துவான்
சொன்னவிப்பிராபானடந்து தொடர்ந்துபேரவையுட்புகுந்
தின்னல்கூரவிரங்கிவாய்மொழி யின்னகூறினனுலரோ. (௧௧)

ஆதிநூலொருநாலுநூலுட னங்கநூன்முதலாகநூ
னீதிநூலுமறிந்துளீர்விளை நீள்பருத்தியவாவினும்
பாதிநீரதனுகவிறைப்பது பன்னினீரெனலகேட்டன
னீதியாருமயுததமென்ப ரெவர்கருமின்னதிசைந்திரா. (௧௨)

அன்றியாப்புடைநாதனூர்திரு வமுதுசெய்வதனுக்கிவை
யின்றியேயமையாமையாலரு ளீரொனகவொடிரந்தன
னன்றிலாதவர்நஞ்சுணத்தகு நாதர்தானமுதுணபரோ
வென்றசஙகதியாடிவன்மையி யம்பியொலலேயெழுந்தரோ. (௧௩)

வேறு

எண்ணீர்மையற்ற மறையோர்பருத்தி யினடயேகுளத்துளருகுந், தெணணீரிறைப்ப வதுகண்டுசிந்தை தெருமநதுநின்றுசெயலபோ யக, கண்ணீரிறைதது முறையிட்டிரந்து களையாதிசைவன்முடிமே ல், விணணீர்முடித்த திருவாப்பனூரர்மெய்த தாணமுன்வீழநது மொழிவான். (௧௪)

தேவாதிதேவ கயிலாயவாண திரிசூலநாதமுறையோ
மாவாடுதொரு வனவிப்பிரேசர் வலியட்டசம்புமுறையோ
மேவார்புரங்க டனிபாழ்படுத்த விறலவாகைவீரமுறையோ [யோ
வாவாவிதென்கொன்மறையோர்செயதீமை யணியாப்பனூரமுறை

என்றென்றரற்றி மொழிகின்றசைவ னிதயகுறிப்பின்வழியா ய், நின்றென்றுமன்பர் நினையுங்கருத்து நிறைவேற்றுமாதிமறைநூ, லன்றென்றுமற்றி தாமென்றுமுண்மை யறியாதினைப்பமுடிவி, லொ ன்றென்றுநின்றபொருணமூலலிங்க வுருநின்றும்வந்துபகர்வான் ()

வேறு.

இசையநந்தமை வழிபடும்வேதியவிவ்வூர்
நசையொழித்தியா மலைமகளுமையொடுநலஞ்சேர்
திசைவயிற்படர்ந் துளத்தினுக்கிசையிடஞ்செல்வேம்
வசையிலாதநின் குடிமைபமுதீயும்பின்வருதி. (௧௭)

தொழுகுலத்தில்வந் திழிகுலத்தியற்கையைத்தொடர்ந்து
பழுதியற்றிநீர் பருத்தியுட்பாய்ச்சியபதக
ரழுதரற்றநம் மாணையினுருமினோடதிர்கன்
மழையிறைப்பவூர் பாழ்படுமொய்ந்தெனவழங்க. (கஅ)

தேவதேவநங் கீலகநாயகதெரிந்த
மூவர்வானவ ரருந்தவர்யோகியர்முனிவ
ரேவருந்தொட ராவனையெங்ஙனந்தொடர்வேன்
றாவியன்னமன் றனொடும்போம்வழிதுருவி. (க௯)

என்றுகூறலு மிறையுளமகிழ்நதியாமேகுந்
துன்றுநீணெறி யிடதினம்விடையடிச்சுவடும்
பொன்றொடுத்தன கொன்றைநாண்மலருமுன்பொருந்துந்
தென்றமிழ்த்திரு நாட்டினிக்குறிவழிசசேறி. (உ0)

எனவுரைத்தணி யாப்பனூர்த்திருவுருவிலிங்கந்
தனைமறைத்துமை யாளொடுஞ்சேயொடுந்தாவுந்
துணைவிடைப்பரி மேற்கொடுநடந்தனன்சுருதி
முனைவனுத்தமன் பசுபதிபரமனைம்முகத்தோன் (உக)

அந்தவேலையி னருச்சகனகங்குழைந்தவ்வூர்ச்
சந்தநான்மறைக கிழவர்தம்வீதியைத்தணந்து
முந்தைவீதியி னிடந்தொறுங்குறுகியேமுககண
எந்தையாப்பனூ ரிறையவர்மொழியிதென்றியம்பும். (உஉ)

சிற்பரன்றிரு நாமமுச்சரிப்பவர்திருநீ
றற்புடம்பினி லணிபவரவனையர்ச்சிப்போர்
கற்பின்மேம்படு வனிதையர்யாவருங்கழறு
இற்பனீங்கிது சத்தியஞ்சததியங்கேண்மின். (உ௩)

மதிமுடித்தநங் கீலகநாயகர்வயனெற்
பதர்பிடிப்பநீர் பருத்தியினிறைத்தநாற்பனவர்
சிதைவுறப்பெருங் கன்மழையுருமொடுஞ்சிந்திப்
பதியறக்கெடும் போமினப்பாலெனப்பகர்ந்தான். (உ௪)

சொன்னவாசகஞ் செவிநுழைந்தீர்த்திடத்தூயோ
ரன்னமாநகர் துறந்துசென்றயனகரடைந்தார்
பின்னர்மூடரு மறுதொழிற்குரியரும்பெயரா
தென்னிதாகுமென் றிகழ்ந்தனரிற்கணேயிருந்தார். (உ௫)

ஆதிசைவரின் மாசிலான்மனைவிபாலரனு
ரோதியேகிய வருண்மொழிபகர்ந்தவளோடும்

போதுநன்னெறி விடையடிச்சுவடுகண்பொருந்த
நாதனூர்திரு வருணினைந்தகநெகநடந்தான். (உ௬)

அக்கணத்தெழு முகிற்குலமானதானையில்வான்
மிக்கெழுந்துக முடிவெனமன்பதைவெருவத
தக்கபாதலத் தரவிறையுடனெளிதரவெண்
டிக்கயங்களுஞ் செவிடுறவிடித்தனதிரண்டே. (உ௭)

மீதுவிப்பிரர் விழிமணிதெறித்திடமின்னிக்
காதடைப்பவார்த் தனவவர்சிகைத்தலைகடிதிற்
பேதமுற்றெதிர் பிளப்பவன்பெருங்கலவெங்கால
தூதர்விட்டெறி கவண்கல்கொலீதெனச்சொரிந்த. (உ௮)

இடிக்குலஞ்சிலை மழையொடுஞ்சிதறிடவெங்கும்
வடிக்கும்வெண்சுதை தீற்றியமாடமாளிகைகள்
கொடிக்கொள்கோபுர மாலயமரங்குசெய்குன்றம்
பொடிக்குலத்தொடும் வேறறத்தகர்ந்தனபுரமே. (உ௯)

மக்கள்பேர்சொலி யழைப்பர்மற்றவர்சொரிமழைக்கற்
றெறுக்கசெம்புனீ ருடன்வரக்கணமுயிர்சோர்வா
ரொக்கலிற்சிறு குழவியையெடுப்பதற்கோடிப்
புக்கமாளிகை யுருமிறுவிடிந்துயிர்போவார். (௩0)

கருத்தழிந்தியா மருச்சகனிரப்புரைகடிந்து
பருத்திசெய்ததிற் பலித்ததிப்பலனெனப்பகர்வா
ரருத்தியுற்றுயிர் பிழைத்திடச்செய்யிலாப்புடைய
நிருத்தர்கோயிற்கே கொடுப்பநம்பங்கெனநினைப்பார் (௩௧)

உரியபங்கினுக் குள்ளநீரிறைக்கவுமுற்ற
பரிசிதென்னிலாப் புடையவர்கோயிலுட்பட்ட
திரவியங்கவர்ந் தவர்படுஞ்செய்கையார்தெரிப்பார்
நரகமுற்றுங்கொள் காணியங்கவர்க்கெனநவில்வார். (௩௨)

தெய்வநாயகன் வயலில்வெண்சாலியைச்சிதைத்த
வெய்யதீவினை கொடிதென்பர்சிவனருள்விலகாச்
சைவவேதியன் மனைபுகில்யாமெலாந்தடையற்
றுய்யலாமென வோடிவரிடையிலவீழ்ந்துலப்பர். (௩௩)

மூதிருமென்புகண் முரிந்திடமுகந்தலைகரங்கால்
பிதிரமெய்யெலாங் குருதியந்தாரைநீர்பெருக
வதிரும்வானக நின்றுவீழ்சிலைமழையன்றி
யுதிரமாரியுஞ் சொரிந்தெனக்கிடந்ததவ்வூருள். (௩௪)

மாசிலாவரு டத்திலவ்வாப்பனூர்மறைந்து
தேசிலாவகை யன்றுதொட்டிருந்ததுசிறந்தோா
பேசிலாரமு தனையவாப்புடையவெம்பெருமா
ளுசிலாலவாய்ப் பெருந்திருநகர்வயினணுகி (௩௫)

மருக்கமழ்கொன்றை வனமலிவைகையின்வடபா
லிருககவுன்னினைப் பொழுதிடவநாயகனித
திருகவிளர்வனத் திருப்பதேநலனெனசசெப்பி
யருககநன்மலர் வேணியனடிபணிந்தைய. (௩௬)

இத்தலப்பெய ரென்பெயராகவீங்குறையு
மததநின்றிரு நாமமுமதற்கிசைபெயரா
யுததமப்புவி யிடபபுரேசனென்றுரைப்ப
நிததமாவரந் தருகெனக்கொடுத்துப்பின்னிமலன் (௩௭)

இன்னமோர்வரந் தருதும்யாமென்னெனிலெமக்கு
மன்னுதென்றிசை விடுமொருகணையெல்லைவனசந்
துன்னுதீர்த்தமொன் றுன்பெயராற்கணடுசுருதி
பன்னியப்புன லாலெமையாட்டெனப்பணித்து. (௩௮)

இடவதீர்த்தத்தைத் தெரிசிக்கிற்பரிசசிக்கிலினிமை
தொடரவுட்கொளிற் குடைந்திடினறமுதற்றொகைநா
லுடையமெய்ப்பய னடைவரீதுணமையென்றுரைத்து
வடிவின்மேம்படு நந்தியைமனமகிழ்வித்து. (௩௯)

அம்பிகைகுர வங்கமழ்குழலணங்கவள்சேய்
தும்பிமாமுகன் றன்னொடுங்கமர்ந்தனன்சுருதி
யெம்பிரானணி யாப்பனூரிறையவனிமையோர்
தம்பிரானுமை தனிப்பிரான்சராசரத்தலைவன். (௪௦)

வேறு.

ஆதிநாளிலிடவபுரப்பே ரானகாதைவரவிதுசொற்றே
நீதிலேசொலொருகவிகற்றே நீறிலாதபொருள்செவியுற்றோர்
வேதநாதர்கயிலைவரைக்கே மேவிவாழ்வரெனமுனிவர்க்கே
சூதனோதவவனிருபொற்றாள் சூடினோர்கடமதுசிரத்தே. (௪௧)

இடவபுரச்சருக்க முற்றிற்று

---

ஆ திருவிருத்தம். ௨௦௮.

# அன்னவினோதச்சருக்கம்.

———:o ———

பின்னர்முனிவராப்பனூர்ப் பெருமானிடவபுரநாத
னன்னவினோதனெனுந்திருப்பே ரடைந்தநிலையீங்கருளென்னச
சொன்னமொழியாற்சூதமுனி சுடர்ச்செஞ்சடிலமுடிதுளக்கிக
கன்னன்மதுரமபழுத்தனைய கதைநீர்கேண்மினெனமொழிவான்.

உம்பர்தொழுங்கந்தரனாப்ப னூர்நின்றிடவபுரத்தினமர்ந
திம்பர்வணங்கவிருந்ததற்பி னிறைவனடியர்ச்சனைபுரியு
நம்பிசிவவேதியர்திலக னலங்கூர்குடும்பத்துடனடநதே
யம்பொன்சடிலரளித்ததிரு வடையாளத்தினெறிசசெலவான் (௨)

நடக்கும்வழிமேலரிபிரமர் நயனங்களிகூர்தரவணங்கக, கிடக்கு
ந்தருமவிடைப்பெருமான் கிளர்காற்சுவடுமெபொறபூவுந், தடக்குங்கு
மப்பூண்முலைமனையா டன்பாறகாட்டிவிரைந்துவிண்ணீ, ரடக்குஞ
சடையார்சேவடியீ தார்க்குககிடைககுமெனத்தொழுவான். (௩)

தொழுதுதொழுதுமணிவிழிநீர் துளும்பததுளும்பநடித்துநடித, த
ழுதுகுழைந்துளுருகிமகிழ்ந் தாராமையினாலடிச்சுவடு, முழுதுங்கண
மேலொற்றியொற்றி முதிர்கறபுடையாளுடன்சிவன்பே, ரெழுது
நாவனருள்வழிசசென் றிடவபுரததுளடைந்தானால் (௪)

அந்தண்கயிலைமலைமருந்தை யமுதையமரர்சிகாமணியைச்
செந்தண்பவளச்சிவக்கொழுந்தைத் திருவாப்புடையபெருமானை
மைந்தர்மலைமாதொடுமிடவ மடுநீரொடுங்கணடதிசயித்துச்
சிந்தைமலர்ந்துகுவித்திருகை சிரமேற்குடியீதுரைப்பான். (௫)

வாயுளிருக்கும்நான்மறையோய் வானுளிருக்கும்பெருந்தேவ
ராயுளிருக்குமணிமிடற்றோ யறிவுளிருக்குந்திருவுருவோய்
வேயுளிருக்குமணிப்பசுந்தோள் விமலைகுரவங்கமழ்குழலெந்
தாயுளிருக்குமொருபுறத்தோய் தந்தாயவழிநான்வந்தேனால் (௬)

வந்தேனுனையானாட்டுதற்கு வையையைநீருண்டருச்சனைக்குச்
செந்தேன்மலருண்டிவ்வனத்திற் றேவேயரியதிருவமுதுக்
கந்தோயாதுண்டென்னிடையே யறியாய்கொல்லோசிறுவிலைநாட்
டந்தாதரிப்பார்யார்யானித் தலத்திலறிந்ததுனையன்றே. (௭)

உண்ணாவமுதேயுனைப்பூசித் துண்புதெனதுவிருத்தியவை
பண்ணுதொழிலிற்சீவனமெய் படியென்றிரந்துமொழிந்திடலுங்

கண்ணுற்காணவருவுருவின் காட்சியிலிங்கத்திடைத்தோன்றிய
பண்ணார்மறையோய்வந்தனையோ பாவையோடுமெனவினவி. (அ)

உரியவாப்பனூரிடைநின் றுயர்வெள்விடையினடந்திங்ஙன்
மருவியாட்சிபெறவிருந்தேம் வருநதிவிடைத்தேவெனவந்தித
தரியதலமாதியமூன்று மடியேன்பெயர்கொண்டருளுகெனப
பரிவினுரைப்பமகிழ்ந்துவரம் பாலித்தேமிப்பார்விளங்க (௯)

இப்பானீவேண்டுறும்பொருளுக கிநதவேகவதிமணலுள்
கைப்பால்வாரிககொடுவனைமட் கலனிட்டறலிட்டிலையேற்றி
வெப்பார்காட்டத்தெரிமூட்டி மெய்யன்புறுத்தியடிலமுதாந
தபபாததனையெமக்குநிவேதனஞ் செய்ததையிறகொடுபோகி. (௧௦)

கற்புககுரியதுணையோடுங் காதற்குரியபுதல்வரொடு
மறபுக்குரியநீயுமகிழந் தருநதியருந்தியெமைவழிபட்
டிற்புக்குறைவாயீதியார்க்குமிசை யேலிவையெபபகல்வெளியாகு
சொற்புக்குறுமப்பகலடிசில தோன்றுதிருககுளுசொன்னேமால ( )

ஈதேலாமுன்பொருட்டுணாத்தே மென்றேயிலிங்கததுட்புகுத
நாதனிடபபுரப்பரம னல்குங்கருணைத்திறம்போற்றிச
சிதமலிவையையிற்படிநது திருவெணமணல்வேணடுபவெடுததுக்
காதனீர்விட்டுலைப்பெய்து கனலவாய்த்துவரி * ட்டடப்புகுந்தான்.

அடும்போதரனைநஞ்சுமமு தாககுமணியையரும்பொருளை
நெடும்போதுளத்தினினைத்திடலு நெற்பால்டிசிலெனப்பாகம்
படும்போதன்னமறியாத பரனையாட்டிநறுந்தேன்வாய்
விடுமபோதர்ச்சித்தன்னமுநி வேதிததிறைஞ்சிமனைபுகுந்தான்.(௧௩)

அணியாப்புடையார்கொடுத்ததிரு வமுதைககுடும்பத்துடனருநதித
தணியாப்பசிதீர்நதகத்துவகை தழைத்தாருலகம்வினவாதப்
பணியாற்சைவனியற்றிவருநாளிலொருநாட்பரந்துபசிப்
பிணியாறறமிழ்நாட் டுயிர்வருந்தும்பெற்றிபார்த்தங்கவன்மனையாள்

காந்தனிடத்தினவனிருகண் களிப்பச்சிலம்புபுலம்பநறுஞ்
சாந்தமணிந்ததனந்ததுமபத் ததும்பநடந்துவரிக்குயிலும்
வாயந்தகிளியும்வாயடைப்ப மதுரந்துளிப்பமலர்முருக்கிற
சேந்தபவளமணிச்செவ்வாய் திறந்தாடிறந்திங்கிவைகேட்பாள்.௧௫

இவ்வூர்மனித்தர்பசியெனுந்தீக் கிலம்பாடெனுநெயிறைத்தெழுப்பி
யெவ்வூர்புகுவோமுய்வதற்கென் றியம்பயாமிவ்வூாபுகுந்தேங

---

துவர் - விறகு.

கைவாய்சிவப்பயானுலக்கை யோச்சாதில்லங்காத்திருப்பத்
தெய்வீகப் பேரமுத கிகந்தினமுந்தருவதெவனென்றாள். (௧௬)

அமுதினுரைக்குமறுத்தெதிர்சொ லாடான்சிறுபோதிருந்துமலர்க
குமுதமணிவாய்த்திருவேயான் கூறினுலையமுதுதவா
நமதுவிருத்திகெடும்பசிதநீ நமையுந்தொடாந்துசுடுமதனாற்
சுமதியுடையாய்கேளற்க சும்மாவிருநீயெனச்சொன்னான். (௧௭)

கேட்டாண்மதிவாணுதற்குறுவேர்கிளர்ந்தாள்புகைநதாளிதழதுடித
டட்டாவேறகட்கடைசிவந்தாள் சிரித்தாள்புருவமேனெரிததா [தா
ணுடடாமரைமென்முகம்புலர்ந்தா ணணபாநன்றுநன்றுசொல்லிக
காட்டாயெனிலியானின்னே யுன்காறகீழ்விடுவேனுயிரென்றாள். ()

அந்தமாற்றஞ்செவிகுடைநது ளாவிபதைப்பமனம்பதைப்பப்
பந்தயாகநைகநடுங்கிநம்பாரப்ப யுனியேபணிமாமதிக்கண்ணி
யெந்தையாப்பனூரிடைப்பண டியறறுஞ்செயலுமறிதியவ்வூரச்
சிந்தைநீதநிவ்விடையடைந்த செயலுந்தெரிதிதெரிதியால. (௧௯)

பின்னரணியாப்புடையபிரான் பெருந்தாட்டுணைகைகுவித்திறை ஞ்சி, யென்னைவருத்தும்பசிப்பிணிதீரத் தாளென்றிரப்பவெதிர் தோன்றிச், சொன்னவுபாயமென்சொல்கேன் சொன்னாற்சுரருமதி சயிப்பா, ரன்னநடையாய்நீகேட்கி லனந்தானந்தமடைதியால ()

அன்னவுபாயம்யாதெனினந் தனைநீர்வேகவதிமணலை,யுன்னதார் வநிரம்பவெடுத துலைவைத்தடிலோதனமாகும்,பின்னர்நிவேதித்தரு ந்திதனைப் பிறருக்குரையேலுரைக்கினதி, துன்னுமணலாமெனச சொன்னான் சொன்னேன்சொன்னேனெனலோடும். (௨௧)

செவ்வாய்க்கமுதாயினவிந்நாட் செவிக்குமமுதாயினவென்றே
யைவாயரவமணிந்தபிரா னருளுமடிகளருச்சனைசெய்
மெய்வாய்நிறைவேதியனன்பும் வியந்தானந்தக்கடற்படிந்தாள்
சைவாகமநூன்முழுதுணர்ந்தோன் சாவாத்துயரக்கடல்வீழ்ந்தான்

வேறு.

அப்பகல்கழிந் தெதிர்பகலிப்பக லடியவர்க்கெளியானை, முப்பர ம்பொருண் முதல்வனைவழிபடின் முதிர்புனன்மலர்போலுஞ், செப் புமின்னமுத மைப்பதெப்படியெனத் தெருமாலுறுங்காலை, யொப் பில்கற்புடைமறைக்கொடியதிக்கிவை யுய்த்துணர்த்தனண்மாதோ.()

ஐயநீயுயிருட லியாளிதனில்வே றுயதென்மருளேன்மற், றய்ய நம்பொருட் டுரைத்தசொன்மையலா லொருவருமறியார்நீர், வை யைநன்னதி படிந்துமுன்போலுலை வைத்தடின்மணற்சோறும், பொய்யுறாதா னருண்மொழியின்மெனப் போகெனப்புகன்றாளால்

அம்மொழிப்படி யீசனைப்பூசைசெய் யருத்திமுனிர்த்தேகச்
செம்மனத்தவன்·கடன்கழிஇயர்நதித் திருமணவுலவாய்ப்பெய்
திம்மெனப்புகுந் தட்டில்வாய்த்துவர்முழு தெரிதெரித்தனங்காணு
தும்மைநற்பய னுலந்ததென்றவவெரி யுதரமுற்றெழச்சோர்வான்.

சன்னிதிக்கண்வந் தடியறவீழ்தருத் தகைமையிற்பணிந்தேத்தி
யென்னினிச்சொல்வ துனகயான்யாவையு மிருநதிடததறிவாய்நீ
யென்னலிற்பழிக் கஞ்சிநின்றுணர்ததின னேரிழைநசையன்றுற்
கன்னியுத்தமிக் கொருபுறமளிததநங் கடவுளேயெனநாதன். (உசு)

வருத்தமொன்றுறி லடியவர்விரைந்தெதிர் வந்துநின்றிரந்தோதுங்
கருத்தறிந்தவை முடிப்பதுவிரதமாங் கண்ணுதலெதிர்தோன்றி
யருத்திகூர்திரு மறையவசைவரு ளதிகவுததமகேணீ
திருத்தவையையெர் துறைமணலமுதஇஞ் செயலினிமுடியாதால்.()

நீயிரக்குமிக் குறைக்கியாநெருநலே நீணிலத்துயிர்க்கெல்லாந்
தாயிரககமிக் குள்ளவன்சுகுணனுந் தண்கதிர்மருமான்பாற
பொயிரக்கமுற்றிர வெதிர்கனவிடைப்புகன் றதண்டவன்பானன்
றுயுரைத்தியாம் வந்தனமிருந்ததுமடைவினிற்போயென்றான். உஅ

என்றநாதனைவணங்கினனிறைவனு மிலிங்கத்துண்மறைந்தான்
பின், றென்றனுடனைககாண்பதறகந்தணன் சென்றனன்செலுமுன்
னர், மின்றவாமுடிக்கோமகன்பேரவை மேவுமந்திரரோடு, மன்றி
ராக்கனவிடைத்தனிக்கண்டபே ரதிசயநவின்றனுல். (உகூ)

வேதவிப்பிரவேடராய்விழிமணி மெய்யினராய்ப்பூதி
சாதனத்தவநடையாரயொருவர்தாந் தனித்துவந்தெனைவேந்தே
நீதமற்றபோரப்பனூரெனுநகர் நின்றுநம்மனையாளுங்
காதன்மக்களும்வீடிலேம்வையையின் கரைமருஙகிருக்கின்றேம்.()

அன்றியும்பசித்திருந்தனமமுதினுக் கடைந்தனநின்பாலியா
மென்றுகூறியங்ஙனமுறைநதேகின ரென்றலுங்கனிந்தூறுந்
துன்றிருங்கனிச்சுவையெனசசெவிப்புலன் சுவைப்பமந்திரர்யாரு
நன்றுநன்றெனமகிழ்ந்தணியாப்பனூர் நாதனைப்புகழ்காலே. (௩௧)

ஆதியாகமவேதியனரசவை யணுகியங்ஙனம்வைகி
யீதியாப்புடைநாயகர்திருவெணணீ றெனக்காஙகுவித்தேற்று
நீதியானுதனிலவுறத்தரித்தன னிமலனர்ச்சகன்பின்னர்ச் [ன்.()
சோதிவான்மதிவேந்தகேளற்புதஞ் சொல்லுகேனெனச்சொல்வா

மற்றுநீதியிலாப்பனூர்விடுத்ததும் வரும்வழிக்கடையாளஞ்
சொற்றதுந்திருமனையவளுடன்கூறி தொடர்ந்துபின்படர்ந்திங்ங

னுற்றதுந்துறைமணலமுதுகந்தது முண்மையில்லவள்பாற்போ
யற்றதும்பரன்விடைகொடுத்துரைத்தது மறைந்தனனயராதே. ()

வேந்தர்சேகரன்குதூகலித்துருகினன் வேத்தவையுள்ர்கோமான்
சாந்தநீற்றினன்கனவுரைபுகன்றதுஞ் சைவநூறசிகையாளன் [ற
கூர்ந்துவந்நிலைபகர்ந்ததுஞ்சருககளைக் குன்றிற்றேன்மழைநான்
தாந்தகைத்தெனமகிழ்ந்தனர்புகழ்ந்தன ராப்புடையவர்நாமம். ௩௪

இரைத்தகாதன்முனீர்த்தெழுவேதிய னெழுந்துமுன்செலச்சாந்
த, வரைததரேசனுமமைசசர்பின்வரப்பெரு வளைப்புறந்திரைக்கை
யா, லரைத்தசாந்தணிந்தலர்சொரிந்தமுதமங் கருததியார்த்தெழும்
வையைக, கரைத்தனிச்சிவக்கொழுந்திணைவிரைந்துசெல் காவலன்
கண்டானால். (௩௫)

கண்டகட்பொறிவழியெழும்புனலுரங் கலந்தமுத்திரைத்தீரா
வண்டலிட்டிழிதரமயிர்முகிட்பெழ மலர்க்கரங்குவித்தேகித்
தொண்டருக்கெளிவருங்கருணையங்கடல் துணையடிமுடிசூடத் [ல்.
தண்டெனத்தரைமிசைப்பணிந்தெழுந்தருடழைததிடககரைந்தானு

வேறு.

விரையிருக்குஞ்செழுங்கமல மேலிருக்கும்பொருளுணரா
வுரையிருக்குஞ்சதுர்மறையி னுச்சியிருக்கத்தனிவெள்
வரையிருககத்தொழுமடியார் மனமிருக்கமணிவையைக்
கரையிருக்குஞ்செயலென்னே கரைகடந்தபரமேட்டி. (௩௭)

ஆடளிக்குநறுந்தேன் பெயம்புயற்கும்பாற்கடல்வாய்
நீடளிக்குளறிதுயில்கொ ணெடியவற்குங்கற்பாந்த
நாடளிக்கும்பிமெய்யோக நற்றவர்க்குமற்றவர்கரும்
வீடளிகருநீகனவில் வீடிரந்தசெயலென்னே. (௩௮)

கமழ்முலைச்சிற்றரும்பன்ன மூரலிளங்கனியமலை
சமைவுறத்தனிடதிருப்பத் தனியோதனஞ்சொன்றி
நிமிரநற்கந்தரமிருததி நிறைதருவிண்ணுட்டவர்க்கு
மமுதளிக்குநீகனவி லமுதிரந்தபரிசென்னே. (௩௯)

என்றிணையவகைபன்னி யீறில்களிப்படைந்திறைவன்
றுன்றியநுண்மதியமைச்சர் தம்மொடும்பொன்சொரிகொன்றை
மன்றன்மலர்த்தருநிழலுள் வதிபவற்குமலைமகட்கு
நன்றமைபொற்றிருக்கோயி லினிதெடுக்கநனிநினைந்தான், (௪௦)

வேறு.

சிற்பநூற்பொருண் முழுவதுங்கைகொடேதற்றுங்
[கற்பினூர்தமை யழைத்திருகண்சிறைப்படுத்தும்

பொற்பினுன்மக மேருவின்முடிமிசைப்புனைய
நற்பொன்மாமுடி வகுத்தெனமானநன்கமைத்து. (சக)

அருத்தமண்டப மாதிமாமண்டபமறுகாற்
பொருத்துபீடிகை மண்டபம்பொன்னனுராடு
நிருத்தமண்டபந் திருமதில்கோபுரநிமலற்
கருத்தியான்முடித் துமைக்குமப்படிவகுத்தமைத்து. (சஉ)

பானுமுற்படப் பகர்பரிவாரவானவற்கு
மேனிலத்தினல் லுறையுளும்விதிமுறைதிருத்தி
வானுயர்த்தவெள் விடைகொடிமரம்பலிபீடந்
தானியற்றினன் வேறுளபணிகளுஞ்சமைத்து (சங)

நந்திதீர்த்தத்தின் ஞாங்கர்சூழ்படித்துறைநவிறறிச
சந்தியாமடங் கணடுகறறளிபபுறஞ்சாதி
சிந்துமாதவி வலம்புரிகணவிரஞ்சிறைத்தேன்
வந்துசூழ்மலர் மலியுநநதனவனம்வைதது (சச)

கிருதமாலையினீர் புகவயலவளங்கிளகரு
மருதநன்னிலவளைப பினிலூர்களும்வழஙகிப்
பெரிதுபூசனையியற்றிப் பின்பேரியந்துவைபபக
கருதுமன்பர்கண களித்திடநலவிழாக்கணடு. (சரு)

இன்பமுற்றடி யவர்குடிபுரப்பதறகிசைந்து
முன்புவையையெண மணலமுதுகநதருணமுறையா
லென்புநெகருநின் றிடவபுரேசனையிறைஞ்சி
யன்பிஞெலெடுத் தன்னவினோதனென்றழைததான். (சசு)

சன்னிதிதநெரு வீதியினருச்சகன்றனக்கங
குன்னதத்திரு மாளிகையெடுத்துமற்றுள்ள
நன்னலததகத் தடியவர்க்குறையுளுநவின்று
மன்னமெய்த்திரு வைதிகாநியமமும்வகுதது (சஎ)

நீதிமன்னவர் வணிகர்பின்னவர்குடிநெருங்கும்
வீதிதுன்னுந லாவணமமைததுநீள்விணனோர்
கோதினன்னக ரெனும்படிசெய்தனன்குளிர்வெண
சோதிமின்னிய மதிக்குலக்கோமகன்சுகுணன். (சஅ)

இத்தகைச்சிவ தருமநற்பணிசெயும்பலபாற்
சுத்தமுத்தமிழ் நாடெலாமழைவளஞ்சுரப்ப
மொய்த்தபல்லுயிர் புரக்குநாட்டன்குலமுழுதோம்
புத்தமத்தனி யாண்மகவின்றினிதுவந்தான். (சகு)

வண்மையுங்குல மானமும்பொறைமையும்வழுவா
வுண்மையுஞ்சிவ தருமமும்புகழ்மையுமுடையாத்
திண்மையுந்தனி மகவுடன்வளர்த்தணிதிகழ்பா
ரணமதஙகயத் தொடுஞ்சுமந்தரசுவீற்றிருந்தான். (௫௦)

வேறு.

ஈறிலன்னவி ரோதனெனுங்கதையீதுசொன்னவர் கேள்விமுய
ன்றுளோர், தேறுநன்னிதி யாயுள்பெரும்புகழ்சேர்வரின்னலுறார்
பசிகொண்டிரார், மாறின்மன்னர்ச மானரொனும்படிவாழ்வரொன்ன
வுமாதவர்முன்சொல, னீறுமின்னிய மேனியனந்தணர்நேயமுன்
னியகுதன்மகிழ்ந்தரோ. (௫௧)

அனனவிரோதச்சருக்க முற்றிற்று

---

ஆ. திருவிருத்தம். ௨௫௧.

# சந்திரசேனச்சருக்கம்.

———:o·———

கேட்டமாதவர்குழாம் பின்னுங்கேட்பது
வேட்டனம்யாந்தனி விடைப்பிரான்பெயா
ரூட்டுமதீர்த்தத்தின் கதைசுருக்கிமுன்
காட்டினைவிரிததினிக் கழறுவாயென்றார் (௧)

நந்திநாயகப் பெயர்த்திருத்தநன்கதை
சிந்தியாவிருவிழி பனிப்பத்தேக்கிய
புந்தியான்சூதனும் புராணதேசிக
னந்தணீர்கேண்மினென் றறைதன்மேயினான் (௨)

பண்டைநாண்மந்திரி யுடனோர்பார்த்திபன்
குண்டைநீர்மடுவிடைக் குடைந்துமேற்குலக
கெண்டைவாணயனியாற் கிடைத்ததீப்பழி
விண்டயர்வுயிர்த்தனன் விளாந்தென்றோதினான் (௩)

முதுமறையிருடிகண் மொழிந்தவேந்தனியா
ரெதுபெயரெதுநக ரிவற்குப்பூசுர
வதைநெடும்பழியெவள் வாஞ்சையாலுற்ற
ததுதொடர்ந்தலைப்பவீங் கடைந்தவாறெவன். (௪)

உளமதியமைச்சனோ டொற்றிந்நீர்படீஇ
விளைமதிமருட்டுமெவ் வினையிற்றீர்ந்துரும்
வளைமதினற்றளி வாயிருழ்ந்தநன்
முளைமதிக்கண்ணியங் கடவுண்முன்செலா (ரு)

ஆதியையடிபணிந் தரிதினெத்துதி
யோதியவ்வரசன்ற னகர்க்கணுற்றன
னீதினிதெமக்குநன் கியம்புவாயென
நீதியின்வரன்முறை நிகழ்த்துவானரோ. (சா)

ஊடுமின்கொடியனு ருணர்த்துநாதனைக்
கூடுமின்கலவிமே னிலையிற்கோதற
நாடும்வெண்கதிர்மலி னந்துடைப்பதொத
தாடும்வெண்கொடிதிக ழுவந்திமாநகர். (எ)

மறையொலிமுழவொலி மாதராடலின்
றுறையொலியரவொலி துள்ளநாடொறுங
கறையணிமிடற்றுமா காளவீசனுண்
மிறைதருமுலகுயிர்க் குவகைநல்கியே (அ)

முனைவருமுழுதுணர் மோனருந்தவத்
தெனைவருமசைவற விருக்கும்யோகரு
மனைவருமுனிவரு மற்றைமூவரு
மனைவருஞ்சரிப்பதா லளகைதோற்குமால. (கூ)

அத்திருநகர்புரந் தளிக்குமன்னவன்
பைத்தலைச்சுடிகைமீக் கிடந்தபாரகம்
வைத்ததிண்புயப்பெரு வலியினன்மடற்
சித்திரத்தெழினலஞ் சிறக்குஞ்செவ்வியான் (க0)

கழுதுவாய்சிவப்புறப் பகைஞர்கன்னிய
ரழுதுகண்சிவப்புற வரசர்பொன்முடி
யுழுதுகால்சிவப்புறக் கணக்கர்க்கொண்கர
மெழுதுகைசிவப்புற வெடுக்கும்வாளினன். (கக)

புத்தியைத்திரிக்கும்வேள் புணர்சசிநூன்முறை
சித்திரக்குவிமுலை யவளைச்சேக்கையி
னித்தம்வைத்திடைத்துகி னெகிழ்ப்பதன்றியோர
முத்திமற்றிலையென முடிக்கும்பெற்றியான். (கஉ)

கன்னியராடலே நிறைந்தகண்ணினன்
கன்னியர்பாடலே நுழைந்தகாதினன்

கன்னியருடலே திருத்துங்கையினான்
கன்னியர்காமமே களிந்தசிந்தையான். (௧௩)

சதமறுதுறுந்தொகைத் தையலாரையற்
புதமறுநறுமலர் பொதிந்தபாயலி
னிதமறுதனைவது நேமமேற்கொளா
மதமறுயானையின் மதிமயங்குவான். (௧௪)

கொலைவிளையாடும்வேற் குரிசில்கோதையர்
முலைவிளையாடும்பொன் மார்பன்மூரிவெஞ்
சிலைவிளையாடுந்தோட் செம்மலெணடிசைத்
தலைவிளையாடும்பேர்ச் சந்திரசேனனே. (௧௫)

ஆமத்தார்வேந்தன தமைச்சனன்னவன்
காமத்தாலழிதரு கருத்துக்கேற்பநற்
றாமத்தார்க்குழலியர் தூதிப்புணர்ப்பவ
னாமத்தாற்சுகுணன்சென் னடையிறுார்கருணன் (௧௬)

அன்னவனொடுந்தனி யரசனோர்பகன்
மன்னியகாமநோய் மலருமாலையி
லுன்னதநெடுங்கொடி யுபரிகைககனே
கன்னலஞ்சிலைகடை குழைப்பவைகினான் (௧௭)

மருக்கமழ்ந்நகர் வீதிவாய்ப்பெருந்
திருககுலமறையவர் தெரிவைமேம்படு
மரகதினையூட்டி னலமுதைத்திற்றிய
முருக்கிதழ்வாயினை முத்தமூரலாள் (௧அ)

தேனையும்பாகையுந் திரட்டுஞ்சொலாள
மானையுமீனையு மருட்டுங்கண்ணினு
ளூனையுமயிரையு முருககும்பொறபினள
வானையுமண்ணையு மயக்குங்காட்சியாள் (௧௯)

ஒருசிறுநூல்கிடந் தொசியவோங்கிய
விருகுரும்பையுமசைந் தேறக்காந்தளம்
பெருமலர்வீசிவெண் பிறைபணிப்பநற
றிருமலர்சிவப்பவத் தெருவிற்செல்கின்றாள். (௨௦)

மேனிலத்தேவரும் விரும்பியங்கவா
கானிலத்தேவருங் கவின்கொண்டுற்றிடும்
பூநிலததேவர்பொற் றொடியைப்போதமி
றானிலககோமக னயர்ந்துநோக்கினான். (௨௧)

## வேறு.

மருமலர்க்குழலோ குழல்வகிர்ந்ததனுள் வகிர்த்தசிந்தூரமோவண
ருந, திருநறுநுதலோ திலதமோநெறித்த சிறுகொடிப்புருவமோவெ
ழுதுங், கருவிழியழகோ கடைவிழித்துடிப்போ காளையர்க்கனங்க
வேள்விடுத்த, நிருபமேயனைய திதுவெனவெவரு நிகழ்த்துபொ
ன்றோலவார்குழையோ. (உஉ)

கணணடியனைய கபோலமோநாசி காபரணத்தின்முத் தசை
வோ, தண்ணறுங்கனிவா யதரமோவிரதந் ததும்பிமேலவழிந்த
தேன்மொழியோ, வண்ணலங்கமுகி னணியியன்மிடறோ வமைத்
தடந்தோள்களோசிவந்த, வண்ணவிறபவளங் கிளைத்ததணகிளையி
ன் வாயந்தநன்மணிவிரல்வடிவோ. (உ௩)

சந்தனக்கலவைச் செழுநறுஞ்சேற்றிற் றணபனிநீரினுண்முளைத்
த, சுந்தரககமலத துணைமுகையிதெனச சுணங்குபூததொளிர்தருமு
லையோ, வுந்தியிறகிளைத்த வணிமயிரொழுஙகோ வொருபிடிநுசுப்பி
னதொசிவோ, மைந்தருககமுத மூறறிருந்தொழுக வாய்ந்தபேரல்
குலின்வனப்போ. (உ௪)

நாவலாறடுத்த கரைவளர்கதலி நலங்கவர்பொலங்கவா னெழி
லோ, சேவலர்முடித்த மதிமனைப்புறணிற் றிருந்தியதசைமுழந்தா
ளோ, தூவலார்பகழித தூணியின்கணைககாற் றோற்றமோசிறடித்து
ணையோ, பாவலாருரைககு முவமையுங்கடந்த பாவையோவெவளெ
னநினைந்தான். (உ௫)

நினைத்தநெஞ்சுருவி மலர்க்கணைதுளைப்ப நெட்டுயிர்ப்பெறிந்து
ளைந்துளைந்து, மனைத்தவமுனிவர் பெருங்குலக்கற்பின் மடந்தை
யென்றறிநதுந்தன்மனத்துட், டினைத்தனையெனினு முதுக்குறைவி
லனாய்த் தெரிவைதோணலனுகர்காதல, பனைத்தனைவளரப் பார்த்
தகணடிருப்பாப் பார்த்திபனமைசசனைவாயால். (உ௬)

அழைத்துநீள்கரததாற் சுட்டிமாதிவள்பே ரல்குலின்றுறைப்படி
யாரவந், தழைத்தமற்றினியிவ் வொருததியேயமையுஞ் சதவனி
தையர்சுகம்விரும்பேன், பிழைத்திடினுயயேன் கொணர்கெனமுக
மன் பேசினனபேசலுமனையா, ளுழைத்தனிமகிழ்நன் பிரிவிலாதி
ருககி னுஞற்றுவதெவனெனவுரைப்பான். (உ௭)

சர்த்தினைத்துரந்து மதனுடல்பிளப்பத் தாழ்ப்பதெனிவடனைமு
னிவன், சிரத்தினைத்தடிந்து கொணர்கெனச்சுடர்வா டின்கைதொ
ட்டீய்ந்திடுகாலைக், கரத்தினையொடுக்கிக் கொடுங்கொலையிதையா

ன் காண்கிலேனெனக்கடிதோடிக், குரத்தினைத்தொடர்காற் பசும் பரித்தேரோன் குறைந்தனன்மறைந்தனன்குடபால். (உ௮)

இளமையும்பொருளு மடமையுமரசு மிவையொருநான்குமாய வெய்தும், வளமையிலரசன் பழிப்புகழ்பரந்த வண்ணமொத்திருண்டளிர்கங்கு, லளவகன்முறைசெ யரசனதேவ லாணையாலெழுகுமுங் திரியும், விளையொலிநகர்துஞ் சளவுநின்றேகி மிக்கவர்கொடிமனை புகுந்தான். (உ௯)

பனிமலர்த்தளிம மீமிசைத்துயிலும் பார்ப்பனிமருங்குகண்படை கொ, டனிமறைப்பனவன் சிகைத்தலைதடறு * தணந்தகூர்ங்கருவி யாற்றடிந்து, கனிபழுத்தமைந்த மழலையந்தீஞ்சொற் கவிரிதழக்கு விழலைகணைக்கட், குனிசிலைப்புருவக் கருநெடுங்கூந்தற் கொடியி னைப்பிடித்தலுந்துடித்தாள். (௩0)

வேறு.

இறந்தவாடவற் கேங்கியங்கெய்துறை
துறந்தவாளவற் கண்டுதுண்ணென்றழத்
திறந்தவாயினைச் சிக்குறச்சேமியா
மறந்தவாமதி மன்னன்முன்விட்டனன். (௩௧)

விட்டபோது விடாநசைவேந்தன்வே
டொட்டபோது சுவேதெலாநின்கட்
பட்டபோது குளிர்ந்தனபாவைநீ
நட்டபோதென் னயப்பறிவாயரோ. (௩௨)

முலைத்தலைச்சுக நல்கிடின்மோகவேள்
கலைத்தலைத்தொழிற் காந்தையர்கைதொழ
வலைத்தலைத்திரு வன்னவுன்றன்னையென்
றலைத்தலைத்தனி தாங்குவன்யானென்றான் (௩௩)

என்றபோதத் திருசெவியின்றனை
மன்றனுறு மலர்க்கையிற்சேமியா
நின்றநேரிழை நீதியைவேரொடுங்
கொன்றவேந்தனைப் பார்த்திவைகூறுவாள். (௩௪)

கொலைவிழைந்தவர் செய்ந்நன்றிகொன்றுவாழ
தலைவிழைந்தவர் சாதி † விழைந்தவர்
புலைவிழைந்தவர் பொற்பழிந்தேபிற
னிலைவிழைந்தவர் யாவருயர்ந்துளார். (௩௫)

---

* தடறு - உறை.
† சாதி - கள்.

தாரமல்லவர் தாயென்பதாயினை
சேருமன்னை நிருபர்முன்னோன்மனை
சாருமன்னை யினுந்தவத்தேசிகன்
பாரிபார்ப்பனி பார்க்கினதிகமால். (௩௬)

இன்னதன்மை யிருக்கமற்றியாரென
வென்னையுன்னினை யீறிலசெங்கோன்முறை
மன்னர்சென்னெறி மாறறினைமாற்றினை
கன்னவின்மனக காவலனீயென்றாள். (௩௭)

குவடுபட்ட குவிமுலைககூாவிழி
யவடுவர்ககனி வாயினறைந்தசொற
றுவடுணர்க்கழை நாணொலிதுன்றலிற்
செவிடுபட்ட செவியினன்கேட்டிலான் (௩௮)

காதரப்பெருங காமுகரேறனான்
மேதரத்தன மேற்றன்மிடுக்கினா
லாதரதினி லங்கையினான்மருஉம
போதரற்றினள் பொறபினிலொப்பிலாளை (௩௯)

அனையகாலை யரசனைவைதுநீஇ
மனையள்பாறறுயர் மாசறமாற்றுவா
னெனவவவேதியன் றுணிகவாப்பழி
வினையுருக்கொடு வந்துவிலககினான். (௪௦)

இடிகரும்வெம்பகு வாய்திறந்தேங்கும்பற்
கடிக்குமஞ்ச வுறுக்குங்கண்மேற்கனல்
பொடிக்குநின்று புகைந்துயிர்க்கும்பிட
ரடிக்கும்வஞ்சினங கூறுமடர்க்குமால். (௪௧)

என்னபாவ மிதுவென்றழுங்கு
மன்னவாபழி தாவெனுமந்திரி
தன்னைவாபொர வென்னுந்தனித்தனி
இன்னல்கூரயிவ் வாறுதொடர்ந்ததால் (௪௨)

வேறு.

மேவுமவந்திபு நாடுமிகந்துபின் வேறேருங
காவலன்மந்திரி யோடியுழன்றிரு காலோய்வர்
கேவலவெம்பழி தீர்வகைகண்டிலர் கேதாரம்
போவதுபுந்தியி னெண்ணினர்தனர் போனாரால். (௪௩)

எவ்வுயிரேனு மருந்திடினெஞ்சத் திகவாதே
இவ்வியலியகம தாகத்திரட்ரு சிவதீர்த்தம்
வெளவுறமூழ்கினர் கேதாரத்தமர் மாதேவன்
செவ்வியதாண்மல ரங்கைவணங்கினர் சென்றூரால (சச)

கொங்கலர்சேர்பிரு தூதகவாவி குடைந்தேகிக்
கங்கையின்மூழ்கினா காசியிலீசன் கழல்பேணிப
பங்கமிலசீச யிலம்பணியாவருள் படாகோடி
சங்கரமேவின ரங்கணமர்ந்து தணந்தாரால (சரு)

கோதாவிரிகண வேணிபிறுகினி குளிருந்தண
போதார்பொன்முகி முதலாநதிகள புகுநதாடித்
தீதார்பழிகழி யாதேதொடர்வுறு செயலெண்ணித
தாதாரிதழியர் யேகாம்பரநகர் சார்ந்தாரால. (சசு)

சைவாகமமுறை மலையாள்வழிபடு தண்கூதப
பைவாளரவணி பவாகான்மலாகள பணிநதேகிப்
பெய்வார்மழைதவழ கரிசயிலத்துறை பெருமானுரு
செவ்வாய்வரத முகுநதனைவநதனை செயதாரால (சஎ)

சூழ்ந்தொளிர்காஞ்சி கடந்துதலன்பல தொழுதேமின்
ருழந்தொளிர்வேணிய னுமையுடனூடிய தனிமன்றம
வாழ்ந்தொளிதிலலையி னைலலைவணஙகி மகிழ்ந்தேவின
போழ்ந்தொளிர்கோபுர வாயில்பணிந்துள் புகுந்தாரால (சஅ)

சிமையநெடுஞ்சிலை யுடையபரம்பொருள் சிவஞான
மமையநிரம்பிய வெளியொளிமன்றினு ளகலாதே
யுமையவளம்பிகை பனைசிவசுந்தரி யுடனூடு
மிமையவர்கும்பிடு நடமிருகண்களி னெதிர்கண்டார். (சகூ)

இருவிழிமென்புன லருவிசொரிந்திட வெதிர்வீழா
வுருகினர்நின்றடி பரவினரஞ்சலி யுடன்மீளா
வரும்வழிகணடன ருயர்சிவகங்கைநன் மலர்வாவிப
பொருகரையின்புடை யெழுகடலுண்டருள் புகழோனை. (ருO)

முதுதிரிபுண்டர நுதலனைமென்சடை முடியானை
யதிர்கடனஞ்சினை யமுதினுகர்ந்தவ னனையானைச்
சதுர்மறையின்பொரு ளறிவனையின்றமிழ் தருவானைப்
பொதியநெடுங்கிரி முடியினிருந்தருள் புரிவானை. (ருக)

இனிதுன்றெரிசன மெனவந்தடியிணை யெதிர்வீழா
முனிபுங்கவவுனை நனிநம்பினமென மொழிவார்முன்

புனிதன்சிவமுனைர் விழிகொண்டனையவர் புரிபாவந்
தனையுந்தெரிபவ னருடந்தெதிர்மொழி தருவானல (ருஉ)

வேறு

ஓவருங்கொடியபாவ முழந்துடனவெகுநீவி
ரீவாவருஞ்சுறுகாணுஙகட் கினியணித்ததனுற்றேவா
தேவரும்பொதுவினுடல தெரிசிதநீரொனையுங்கண்டா
மேவருங்களிப்பான்முன்செய வெம்பவம்விளமபிததீர்வீா (ருங)

என்றுரைகொடுப்பவேந்த னிறைஞ்சிநின்றெங்கட்கிஙஙு
னன்றுரைவழங்கயானுசெய நனமையுமுளவோவைய
குன்றுறழநெடியமாடக கொடிநகரவநதியாள்வேன்
றன்றகையழிநதுதேயுஞ சநதிரசேனனெனபோ. (ருச)

என்னுயிரமைச்சன்மற்றீங கிவன்பெயர்சுகுணன்யாகனை
துன்னும்யெளவனததிறசெல்வத் தருக்கிறறுன்மதிமீக்கூர்நது
மன்னுயிர்வருததிவாழந்தேன் மறையவாபொருளகூட்டுண்டேன்
கன்னியரலகுற்காமக கடலிடைககவிழ்நதுவீழந்தேன (ருரு)

நிதம்பகலிரவாய்நூறு நேரிழையவர்தோடேயந்து
மதம்படுவிலங்கினின்றேன் மற்றெலாநிற்கயான்செய்
கதம்புரிவினையினென்று கழறுகேனெருநாட்டேவர்
பதந்தொடவுயர்நதசெம்பொன் படர்நெடுஞ்செயகுன்றேறி. (ருசு)

இருநதனனிவனோடங்க ணிருஞ்சிறைநேமிப்புட்கும்
வருநதுகாமுகர்ககுநததத மனநதொறும்பகிாநதுவைப்பான்
முருஙகெரிமேல்பாலவெற்பின் முகட்டிறசேணுறவளர்ததான்
றிருநதுவேளெனனமாலைச் செககர்வநதணையும்வேலை. (ருஎ

தேனிருந்தொழுகுஙகொவ்வைச் செஙகனிமணிவாய்கதெண்டை
மீனிருந்தொளிரும்வாட்கண் மிககவர்தெரிவைமைககாா
வானிருநதொளிருமின்னின் மருங்குறள்ளாடவநதா
ளானிருஙகொடியார்வைகு மவநதிநீணமறுகினம்ம. (ருஅ)

கணடனன்மதியைமோகக் கார்முகின்மறைப்பமேலாம்
பெணடனமுயங்கியின்பம் பெறவிவன்றன்னொடுந்த
வணடிமிர்குழலாள்சென்ற மனைவயின்வெளவியென்பாற
கொணடணைமுனிவன்சீறிற் கோறியென்றுரைத்துவிட்டேன். ()

சொறபடிமுனிவன்சென்னி துணித்தவட்கொணர்ந்தான்மானக
கறபடிபெயராமின்னைக கரத்தினுலணைக்குமுன்ன

ரற்படிநிறத்திற்சிறி யடர்ந்ததுபிரமபாவ
நற்படிவலஞ்செய்குற்றேம் விடாதுபினலிவதைய. (௬௦)

நெய்யடைகனலிற்சீறி நெருக்கியபழிக்குளெய்த்தேங
கையடையாககளெம்மைக் காப்பதுங்கடமையென்றார்
மெய்யடைநீற்றுவேணி மெய்த்தமிழ்முனிவன்பாவ
மையடையுளத்தீரஞ்ச லஞ்சலென்றருளிமாதோ. (௬௧)

படவரவேணிகாட்டும் பதிநதிவடபாற்றோன்று
மிடவபுரேசன்பாத மிருகடிகைப்போதுன்னி
யுடல்புளகுதிப்பககணணீ ரூற்றிருந்தொழுகவாஙகவ்
வடலரசனைப்பார்த்தன்பி னருள்சுரந்துரைப்பதானான் (௬௨)

கனிநறுஞ்சுவைததேன்லகப்பக கற்றுளோர்க்கினிப்பமேனாட்
பனிவரைமுகட்டிலென்பாற் பரஞ்சுடருபதேசித்த
புனிதநற்றமிழ்சேர்சங்கம் பொலிநகர்வடபால்வையைக
கினிதணித்துறையுங்காட்சி யிடவபுரப்பேர்மூதூர். (௬௩)

ஏயவந்நகரினன்ன விநோதனுமிலிங்கமூர்த்திக
காயதென்றிசையினந்தி யடிகள்பேர்த்தீர்த்தமுண்டான
மேயவத்தீர்த்தமூழ்கி விறல்வடுகேசன்றீர்ந்து
போயினன்பிரமபாவம் பூருவமெனலுங்கேட்டா (௬௪)

குரைமுகவூர்திக்கெய்துங கொடும்பழிவரவென்னிந்தத்
திரைதவழவாவிதோய்ந்து தீர்ந்ததெவ்வாறின்றெங்கட்
குரையெனச்சிறுவிதிப்பே ருடையவன்மகததிறசெந்தா
மரைமகனமரர்நாப்பண் வந்துமுன்பிருககுங்காலை (௬௫)

சராசரசடஙகடோறுந் தனித்தனிகலந்துநிற்கும்
பராபரன்விமலனெந்தை பசுபதிசிரங்கள்போலும்
விராவியசிரங்களைந்தும் விளங்கியதன்க்குமென்றாத
துராணவமடைந்துநின்றா னஃதுணர்சுருதிமூர்த்தி. (௬௬)

சினந்தலைநிமிர்ந்தசூலத் திகம்பரக்குமரற்கூவி
மனந்தலைமயங்குந்தண்பூ மகன்றலையைந்தினொன்றி
னனந்தலைவிளஙகுமெம்மை நகுதலையறுத்தியென்றா
முனந்தலையறுத்தான்பாவ மூடுகியதரன்பாற்போகி. (௬௭)

ஐயவிப்பாவம்பாறும் வழியெனக்கருள்செயென்ன
வையையின்வடபாற்செங்கோல் வழுதிகாட்டிடவநாமச
செய்யநன்னகருண்டந்தத் திருநகர்தென்சாராக
வெய்துறுமிடவதீர்த்தம் விளங்குமூவுலகுமேத்த. (௬௮)

அவ்விடைமருவிஞழ யரும்பவங்கழிந்துபின்ன
ரிவ்விடைநம்பாற்சேறி யெனப்படஇப்பழியினீங்கித்
தெவ்விடைமழுவலான்பாற் சென்றனன்காரிமேனு
ளுவ்விடையடைந்தந்நீர்தோய்ந் துறும்பழிகழிவிநீவி (சுகூ)

அன்னகரிலிங்கமூர்த்தி யன்னவிஞேதநாதன் ௬
பொன்னடிவணங்கிவாழ்ந்து போற்றிநீடவந்தியென்னுஞ்
சென்னகரடைமினென்று செப்பலும்விடைகொணடேகி
மன்னவனமைச்சனேடும் வந்துகாவிரிநீர்மூழ்கா. (எ0)

வேறு.

எருதூர்திருவிடைமருதூருடையவ ரிருதாடொழுதடிகருதாரூா, பொருதூர்நகையிறையுறையூர்பலநெறி புகுவார்பரவினரொருநாவ ற், றருதூரிடைவளர்சடைபோனிறைபுனல் தழனூதிருவுருமுழுதூ ரும், விருதூர்கொடிவிடையவர்கான்மலர்சிர மிசைசூடினர்பழிவி னைதீர்வார். (எக)

வேறு.

விரிநதியணியரங்கமேல் விழிவளர்கரியசெங்கண்மால்
திருவடிமலர்பணிந்துநீ டிரிசிரகிரியிலெந்தைதாள்
பரவினர்பழிகழிந்திலார் பதிபலநெறிகடந்துபோ
யருள்பொழிவழுதிதென்றனு டதனைவிரைவினடைந்துளார். (எஉ)

வேறு.

செந்தமிழ்த்திரு நாட்டிடைவிரைந்துசெல்பவர்பூஞ்
சந்தனத்தட வரைமுனிதமக்குமுன்பிசைத்த
சுந்தரப்பெருந் திருநகர்விழியெதிர்தோன்ற
மந்தரப்புயத் தவர்தொழுதிம்மெனவருவார். (எங)

தடநகர்க்கயல் வரவரநிழலெனத்தழுவித்
தொடர்பெரும்பழி காறளர்ந்தயர்ந்துபின்றூங்கிப்
படர்திறத்தினை நோக்கினரிருவரும்பலகா
னடநவிற்றினர் பாடினர்மகிழ்ந்தனர்நடந்தா (எச)

தாணுமெய்த்திரு வாப்புடையவர்பெருந்தலத்தி
னேணிபுக்கனர் விலகெனத்தொடர்பழிகிசைத்து
மாணுறத்தமை வம்மினென்றழைத்தெனவானங்
காணகர்க்கொடி நிமிர்ந்துபினுடங்குவகண்டார். (எரு)

நஞ்சமுண்டவா யருவருப்பறநனியமுது
பஞ்சநாண்மலர் முகத்தரற்கருணதிப்பாங்கர்

வஞ்சிபோன்மருங் குடையவர்முகமெனமலருங்
கஞ்சநாண்மலர்த் தடமுநந்தனங்களுங்கண்டார். (எசு)

உவந்தசிந்தையர் புரம்புகுந்திறையவருலாக்கொ
ணிவந்ததேர்விழா வீதியுமண்டபநிலையுஞ்
சிவந்தநுண்டமிழ்க் கழகமுமளகையான்செல்வங்
கவர்ந்துவைத்தன பலபொருட்டெருவுநேர்கண்டார். (எஎ)

வட்டவெண்குடைச் சுகுணனுஞ்செந்தமிழ்மாறன்
மட்டறுமலர்க் கொன்றையினர்க்குமுன்மணற்சோ
றட்டவேதியற் கன்பினாலியற்றிமேலாட
விட்டகேதன மாளிகைவீதியுங்கண்டார். (எஅ)

பைந்தமிழ்த்திரு ஞானசம்பந்தர்தம்பனுவன்
மந்திரப்பதி கத்தினாலமணர்பொய்மதம்போய
நந்தநற்சிவ சமயமேசயத்தம்பநாட்ட
வந்திருக்கும்வை திகதிருமாமடங்கண்டார். (எகூ)

தெளித்தசெம்மணி வெயில்விடத்தருவின்மென்சினைக
டளிர்த்ததொத்தலி லரம்பையர்பாசிலைதனைத்தேன்
றுளித்தபூவுடன் முறியெனக்கொய்துறச்சுரர்கண
களித்துநோக்கியுண் ணகப்புரிமாடங்கள்கண்டார். (அ0)

விரும்புமேனிலை யிருந்துதம்மென்குழற்காளைச்
சுரும்புதன்பெடை யெனத்தொடர்ந்தெய்த்திடமீப்போ
யரும்புகற்பகப் பொதும்பர்புக்களியினின்றாடக
கரும்பனார்பரு மணிக்கழங்காடுவகண்டார். (அக)

விழித்தபார்வைக ளிமைப்பறத்தஞ்செயல்வெறுத்துப்
பழித்தவானர மடந்தையரதிசயம்படவா
னுழித்தவாதுயர் மேடைமேலம்மனையுறைகள்
கழித்தவாளன கண்ணினாராடுவகண்டார். (அஉ)

இன்னதாயநன் னகர்வளங்கண்டுகொண்டேகி
நன்னர்மாதவர் மறையவரருச்சனைநவில்வோர்
பன்னகாபரணன் புகழ்விரிப்பவர்பாங்கர்
மன்னுமால்விடை மடிவிடைப்போயெதிர்வணங்கி. (அங)

எறிந்ததெண்டிரை வாவியின்படித்துறையிழிந்தங்
கறிந்தசங்கற்ப விதிமுறையமைச்சரோடாடிப்
பிறிந்திலாக்கொடும் பழிபிறிந்தகமுறப்பிணித்துச்
செறிந்தமாசற விளங்கினன்சந்திரசேனன். (அச)

வெருவரும்பணி வாயுமிழ்சுடரொனவிளங்கு
மிருவருஞ்சின கரிமடைந்திடவபுரேச
ஞெருவருங்குர வங்கமழ்குழலுமைபாகன்
பொருவருஞ்சரண பணிந்தனர்வேந்திவைபுகலும் (அரு)

தேவதேவநி ராமயதுரியவதீத
மூவராகிமற் றிருவராமொருமுழுமுதல்வ
பாவகாரிய ருளம்புகாவாதியெம்பரம
தாவுமால்விடைக் கீலகநாயகசரணம் (அசு)

நாதபன்னக பூடணசுடர்த்திரிநயன
வேதமன்னவி பூதிமேனியவிளங்ககில
பூதமன்னவ நூபுரமறைசசரணமபு
சாதவன்னவி ஞேதமெய்ப்பரஞ்சுடர்சரணம (அஎ)

அந்தகாரிகங காதரதிரிபுரமரிதத
மந்தகாசவெண கயிலைமாலவரைச்சிகாமணியா
மிந்துசேகர நீலகந்தரவெமக்கிறைவ
சநதநான்மறை யாபபனூாததனிமுதலசரணம். (அஅ)

பருமவாளர வல்குலார்மயறபடுகுழிவீழ
கருமனென்பெரும் பழிதெறககலங்கனுருழந்தேன்
றெருமராவகையருள சுரந்தருணிமிாதிமிலவெண்
டருமமால்விடை யூாதிகழபசுபதிசரணம். (அகூ)

எனனவேத்திநின றிறைஞ்சலுமிருசெவிக்கினிபபச
சொன்னதோத்திரத் திறையவன்மனங்களிதூஙகி
நன்னர்மாககக னத்திடைவாணியினலஙகூா
மன்னகேட்டியென் றவனெதிரிமமொழிவழஙகும் (கூ0)

சினகருறும்பெறிந திலங்குவேறசந்திரசேனு
வுனகருமந்திரி தனக்கும்வன்பழிதொலைவுறற
தெனகருவிததிரு கரஞ்சிரமேற்றிநின்றிறைஞசி
யனகருழாம்படர் தடம்பணையவந்திசென்றடைந்தாா. (கூக)

அடைந்தரசிய லமைச்சியலறந்தெரிந்தாறறி
நடந்துநாள்கழீ இப்பின்னர்முன்விடைபபெயர்நளிநீா
குடைந்தபுணணிய மானமீதிவர்ந்திமகருன்ற
மடந்தைபாகர்தங் கயிலைப்புகிருந்தனர்மாதோ (கூஉ)

வேறு

தொடரவந்திபுரந்தருள்சநதிரசேனன் சுகுணமந்திரியென்றிவர்
தெண்டிரைதாவுங், கடவுணதியிலஞ்சிபடிந்துபின்மேவுங் கடிய

வெம்பழிநின்றுமகன்றருள்காதை, தடையறும்படிவிண்டவர்தின்
செவிசாருந் தகையாந்தமில்வெண்பொனெங்கிரியூடு, படர்வரெ
ன்றுசிவன்பெயர்நன்குணர்சூதன் பகரவந்தணர்சிந்தையுவந்தனர்
மாதோ. (கூ௩)

சந்திரசேனச்சருக்க முற்றிற்று.

---

ஆ திருவிருத்தம். ௩௫௨.

# பாட்களச்சருக்கம்.

:o:

வேதமுனிவர்பெருந்தீர்த்த மேன்மைவிரும்பிவினவுதலுஞ்
சூதமுனிவனச்சோவென் சொல்கேனெங்கோனருடைத்தோ
னேதுசெயினும்பரிகார மில்லாப்பாவிபாட்களனென் [ன்.
றேதுபெயரோன்வஞ்சனைக் கோருறையுளனையாறெருமறையோ

அவனிமடுத்தோய்ந்துஞற்றுபவ மகன்றுசெழியற்கமைச்சுரிமை
புவனிமுழுதுந்திறையளப்பப் புரிந்துசிவசாயுச்சியமா
மவமையொழிந்தபெரும்பதவி யுற்றானெனனுமுறுவரவ [ழிவான்
னெவனிவரும்பேறடைந்தனன்மற றெமக்குவிரித்தோதெனமொ

புண்டரீகமலர்ப்பசுந்தார்ப் பூசுரேசர்மகச்சாலை
கொண்டறூமம்புயலளக்குங் கொடிமின்கொடிகடலையளக்கும்
விண்டநாதமறையொலிபோய் மேகநாதமளந்தப்பா
லண்டகூடமுகடளக்கு மளகைநாமப்பெருமூதூர். (௧)

அரணிதிருத்திக்கடைந்தமைத்த வழல்வாயோமநறுந்தூமஞ்
சுரனையவிதுய்த்திடவழைக்குந் தூதிற்றுறக்கம்புகுமடவார் [ற
கருமென்குழற்கூட்டடிற்புகைபோய்க் கடவுண்மகளிர்முடித்தகுழ
றருவினறுமென்மலர்வாசந் தனையும்விழுங்கிக்கமழுமால். (௨)

இருகையொருநன்முகப்பிரமா விவர்கொலெனும்வைதிகர்நெருங்கி
தருமநிதியாற்கலிதுரந்து தழைகருமவ்வூரவதரித்தோ [த்
னூரியபெயர்பாட்களனுங்குருவா யுடையதாதையிடத்தினின்றுங
கருதுஞ்சுருதிமுழுவதுஞ்சாத் திரமுங்கனியக்கற்றுணல். (௫)

